கொரோணா நிவாரணப் பணிகளில் 24 மனையார் | சித்திரைத் திங்கள் சிறப்புகள் | கொரோனாவை விரட்டி உலகைக் காப்போம் !

ரூ.20/- | ஏப்ரல் 2020 சித்திரை | தீபம்: 8 ஒளி: 4




24 மனை குலமுரசு

தமிழ் மாத இதழ்



திருமண வரமளிக்கும் திருமணஞ்சேரி


SRI VEERA'S GROUP
SRI VEERA'S CREATIONS
பல ஜவுளி கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்
ஸ்ரீ வீராஸ் கிரியேஷன்ஸ்
SRI VEERA'S CREATIONS
(Silks, Textiles & Readymade collections)
மொத்த விலை ஷோரூம்
Wholesale showroom
2 Wheeler & Car Parking வசதியுடன்
எண். 51-52/1, M.C. ரோடு, சென்னை - 600 021.
போன் : 2590 1771, 2590 1772, 2590 1773, 2590 1774

24 மனை குலமுரசு

தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2013/48200

தீபம்: 8 ஒளி: 4

ஏப்ரல் 2020 சித்திரை

24 மனை தெலுங்கு செட்டியார்கள் இனமக்களுக்காக
24 மனை தெலுங்கு செட்டியார்கள் சேரிட்டபிள் டிரஸ்ட்
அறக்கட்டளையால் நடத்தப்படும் அரசியல் சார்பற்ற சமூக மாத இதழ்
24 மனை தெலுங்கு செட்டியார்கள் தலைமைச் சங்கம்
கீழ்ப்பாக்கம், சென்னை - 600010.

சிறப்பாசிரியர்:
கரூர் கே.சி.பழனிசாமி
Ex.MP., Ex.MLA.,

ஆசிரியர்:
Dr. துரை அங்குசாமி
M.A.,B.L.S.,B.Ed.,Ph.D.,

40 லட்சம் மக்களின் நாடித்துடிப்பு
24 மனை குலமுரசு மாத இதழ்

ஆண்டுச் சந்தா ரூ. 200/-

ஆண்டு சந்தா செலுத்தும் முறை

Account Name	: 24 MANAI KULAMURASU
Bank Name	: CANARA BANK
Branch	: CHENNAI KILPAK
Account Number	: SB. A/c. 1650101014869
IFSC CODE	: CNRB0001650

மேற்கண்ட வங்கிக் கணக்கில் ஆன்லைன் மூலம் ரூ.200/- செலுத்தி அதன் பரிவர்த்தனை விபர ஸ்கிரீன்ஷாட்-ஐ 9965 900 990 என்ற வாட்ஸ்அப் (அ) kulamurasuoffice@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் முகவரி மற்றும் செல்போன் எண் குறிப்பிட்டு அனுப்பவும். கனரா வங்கியில் செலான் மூலம் பணமாக செலுத்துவோர் சந்தா ரூ.200 + வங்கி சேவைக் கட்டணம்+GSTவரி ரூ.60 சேர்த்து ரூ.260/-ஐ கனரா வங்கிக் கணக்கில் செலுத்தி, கௌண்டர் ஃபைல் ரசீது நகலுடன் உங்கள் முகவரி எழுதி மின்னஞ்சல் (அ) வாட்ஸ்அப் (அ) தபாலில் அனுப்பவும்.

24 மனை குலமுரசு,
330/1, சின்னாண்டான் கோவில் வீதி,
கரூர் - 639001.
Customer Care Cell: 9965 900 990
Ph: 04324-240663 - K.C.S.R.சிவக்குமார்
E-Mail: kulamurasuoffice@gmail.com

ஆசிரியர் குரல்

சித்திரைப் புத்தாண்டில் சேமநலங்கள்
செல்வ வளங்கள் சிறந்திட குலமுரசின்
செழுங்கனித் தீஞ்சுவை மிகுந்த நல்வாழ்த்துக்கள் !

உரித்த நாளில் வெளிவந்து குலமுரசு இதழ்
சரித்திரச் சாதனை படைத்துள்ளது இதுவரை.

ஆனால்...

அசாதாரணச் சூழல் நிலவுகிற காரணத்தால்
அச்சாக்கப் பணிகளும் அஞ்சல் சேவையும்
அசைவற்று நிற்கின்றன.

இருப்பினும்,

தடையிலாப் பயணம் தொடரவேண்டும் எனும்
தாகத்தின் காரணமாக இம்மாத குலமுரசு இதழ்
தனித்துவமாக - மின்இதழாக (Digital Magazine)
தயாராகியுள்ளது.

வாசகர்கள் கைபேசி மற்றும் கணினி வழியாக
இணையத்தைப் பயன்படுத்திப் படிக்கலாம்.

நிலைமை சீரடைந்ததும் வழக்கமான வடிவமைப்புடன்
குலமுரசு வாசகர்களை வந்தடையும்.

கொரோனா எதிர்ப்பு யுத்தத்தில் முழுவீச்சில்
செயலாற்றும் மத்திய மாநில அரசுகளின்
சேவைகளை மனதாரப் பாராட்டுகிறோம்..



மக்கள் உடல்நலம் காக்கும் இந்த
மகத்தான திருப்பணியில் அல்லும் பகலும்
அயராது - அர்ப்பணிப்புடன் செயலாற்றும்
மருத்துவர்கள் செவிலியர்கள் - மருத்துவப்
பணியாளர்கள் - காவல்துறையினர் -
அரசுத் துறையினர் - அத்துணைபேருக்கும்
கரம் குவித்த நன்றி !

அன்புடன் உங்கள்
துரைஅங்குசாமி

புதிய சந்தா பதிவு செய்தல், புதுப்பித்தல்,
முகவரி மாற்றம் மற்றும் மணக்கோலம் பகுதியில்
சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய தொடர்பு
கொள்ளவேண்டிய செல்பேசி/வாட்ஸ்ஆப் எண்:

99 65 900 990

(காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை)

Scan & Save Contact

24 மனை குலமுரசு இதழை முகநூலில் தொடர..
https://www.facebook.com/24manaikulamurasu

உலகம் ஒரு கண்ணாடி



உலகம் இயல்பினில் கண்ணாடி போன்றது. கண்ணாடி எதிரே இருப்பதை அப்படியே பிரதிபலிக்கக்கூடியது. கண்ணாடியின் எதிரே நின்று நீ சிரித்தால் அதில் தெரியும் பிம்பமும் உன்னைப் பார்த்துச் சிரிக்கும். நீ கோபமாக முறைத்தால் அதுவும் உன்னைப் பார்த்து முறைக்கும். நீ முறைத்து விட்டு பிம்பம் மட்டும் சிரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது.

புத்தர், ஏசு, காந்தி போன்றவர்கள் உலகை நேசித்தனர். உலகம் அவர்களை இன்று வரை நேசிக்கிறது. ஹிட்லர், இடிஅமீன் போன்றவர்கள் மனித குலத்தையே வெறுத்தனர். சமுதாயம் இன்றளவும் அவர்களை வெறுக்கின்றது. எதைக் கொடுக்கிறாயோ அதையே பெறுவாய் என்பதும், வினை விதைத்தவன் வினையறுப்பான் என்பதும் மக்களின் அனுபவத்தில் விளைந்த பழமொழிகள்.

உலகம் ஞானத்தை உணர்ந்தால் ஞானம் உலகினை உணரும் என்கிறார் லா வோ த்ஸு. இங்கு ஞானம் என்பது ஆதியான மெய்ப்பொருள். ஞானிகள் தத்துவமாகக் கூறியதை இன்று விஞ்ஞானம் உணர முற்பட்டுள்ளது. ஒவ்வொருவர் மனதிலும் அலைகள் உண்டு. அந்தக் கதிர்கள் படும்போது நம்முள் எதிர் அலைகள் மூளும்.

சிலரைக் காணும்போது நம்முள் இனந்தெரியாத அன்பு ஏற்படும். சிலரைக் கண்டதுமே காரணமற்ற கோபம் மூளும். இவை அந்தந்த மனஅலைகளின் எதிர் அலைகளின் விளைவு குழந்தைகளைக் காணும்போது எல்லோரும் நேசிப்பர். காரணம் குழந்தைகள் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளை அறியாதவை.

நீங்கள் குழந்தைகளைப்போல் ஆகிவிடுங்கள் அப்போது தான் பரலோக ராஜ்யத்துள் உங்களால் நுழைய முடியும் என்கிறார் இயேசு.

மென்மையுடன் இருப்பதுதான் அனைத்திலும் வலிமையானது. எவன் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறானோ அவன் உயர்த்தப்படுவான். உணர்ச்சிகளில் மூழ்காமல் மவுனமாயிருப்பவனை உலகின் இடர்கள் அணுக முடியாது.



அருளுரை

மனிதர்களிடையே மகா பலசாலி ஆஞ்சநேயர் ஒருவர்தான். சூரியனிடம் வேதங்கள் கற்றவர். பிரம்மாண்ட வடிவம் எடுத்து கடலையே தாண்டியவர். மலையையே தனது உள்ளங்கையில் ஏந்தியவர். ஆயினும் ஒரே ஒரு இடத்தில் கூட தானே பலசாலி என்று கர்வப்படாதவர்.

அண்ட பேரண்டங்களையும் அழித்துவிடும் ஆற்றல் பெற்ற பிரும்மாஸ்திரம் கூட அவரை ஒன்றும் செய்யாது. ஒன்பது கிரகங்களும் மனிதர்கள், தெய்வங்கள் என்ற பேதம் இல்லாமல் அனைவருக்கும் சஞ்சார ரீதியில் நல்ல, தீய பலன்களைத் தரக்கூடியவர்கள் குருவாகிய பிரகஸ்பதி ஒன்றாம் இடத்தில் வந்தபோதுதான் ராமரே வனவாசம் சென்றாராம். குரு பத்தாம் இடத்தில் இருந்த போதுதான் பரமசிவனே தோஷத்தில் பீடிக்கப்பட்டு மண்டையோட்டில் இரந்து உண்டார்.

பத்திலே குரு இருந்தால் ராமனும் பிச்சை எடுப்பான் என்பது பழமொழி. சாந்தமானவரும், சுபக்கிரகங்களில் முதன்மையானவருமான குருவே கெட்ட இடத்தில் வரும்போது பலன் இப்படி என்றால், அசுபகிரகங்களில் முதன்மையானவரும், ஈசுவர பட்டம் பெற்றவருமான சனி பகவானைப் பற்றிக் கேட்பானேன்?



கடவுளாயினும் படைப்பின் விதிகளுக்கு உட்பட்டவரே! எனவே, ஏழரை நாட்டு சனி பிடிக்கப் போகிறது என்றறிந்த சிவபெருமான் சட்டென்று மறைந்து விட்டார். சாக்கடை பொந்து ஒன்றில் சகதிக் குவியலின் நடுவே ஒளிந்து கொண்டார். மூன்றே முக்கால் நாழிகை அதற்குள் ஒளிந்து கிடந்த அவர் பின்னர் வெளியே வந்தபோது சிரித்த முகத்துடன் சனி பகவான் நின்று கொண்டிருந்தார்.

ஐயனே! ஏழரை ஆண்டுகள் முடிந்து விட்டது. நான் வருகிறேன். பூவுலகின் கணக்கில் ஏழரை ஆண்டுகள் அமரர் உலகில் 3 நாழிகைகள்தான் என்றார்.

மும்மூர்த்திகளில் முதல்வராகிய தாங்கள் சாக்கடைக்குள் புகுந்து கொண்டீர்களே அதுதான் சனியின் விளைவு என்றார் சிரித்துக் கொண்டே.

அப்பேர்ப்பட்ட சனி பகவான் ஆஞ்சநேயரிடம் வந்தார். "அனுமான்! உனக்கு ஏழரை நாட்டு சனி ஆரம்பமாகப் போகிறது" என்றார்.

"ஆகட்டும்" என்றார் அனுமான்.

"கிரக சஞ்சார ரீதியாக ஏழரை ஆண்டுகள் நான் உம்மை பிடிக்க வேண்டும்."

"செய்யும்" என்றார் அனுமான்.


ஏழரையும் வந்தது. சனியும் பற்றினான். அனுமன் ஒன்றும் செய்யவில்லை. மரத்தடியிலேயே படுத்திருப்பார். பசி வந்தால் மரத்தில் இருந்து இரண்டு பழங்களைப் பறிப்பார். தின்றுவிட்டு பழையபடி மரத்தடியிலேயே படுத்திருப்பார்.

வெறுத்துப்போன சனி எப்படா ஏழரை ஆண்டு முடியும்? என்று தவிப்புடன் இருந்து விட்டு அது முடிந்ததும் வேகமாக ஓடிப்போனார்.

உணர்ச்சிகளை மவுனமாக, எதிர்கொள்பவனை இடையூறுகள் அணுகுவது இல்லை என்கிறார் சீனத் தத்துவ ஞானி லாவோத் ஸு.

உணர்ச்சிகளில் மூழ்கிக் கிடப்பவர்கள்தான் இடையூறுகளால் கடும் பாதிப்பு அடைகின்றனர்.

இன்னல்-துன்பம் இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதை உணர்ந்தவன் இரண்டையும் பொருட்படுத்த மாட்டான். அத்தகையவன் அழிவற்ற நிரந்தரப் புகழுடன் என்றும் விளங்குவான்.


AKAS
Caring 7 billion
Trust and Innovation 22 Since 1996
AKAS DripSure
Infusions Controller
For every bed
AKAS TERUMAX Rx
Advanced Syringe pump
with drug library - stackable
Nation wide
Service Network
For Service:
Call 098840-79116
support@akasmedical.com
AKAS INFUMAX
Advanced Infusion pump
TRAZE 12A
Carbon copy
12.1" PATIENT MONITOR
TRIOMAX
Carbon copy
ECG + SPO2 + NIBP Monitor
QVS-100
QUICK VITAL SIGN
Measures 7 Parameters
in 2 Minutes
• Height
• Weight
• BMI
• Oxygen Saturation
• Pulse Rate
• Temperature
• Blood Pressure
TRAZE DUO II
NIBP + SPO2 Monitor
M20
Advanced LED Vision Chart
Manufacturer of Medical Equipment Since 1996
AKAS Medical
240/1, Periya Colony,
Athipet, Ambattur,
Chennai 600 058.
Tamilnadu, India.
sales@akasmedical.com
Mob: +91 98403 79116
Available Across 29 States and 7 UT's
www.akasmedical.com
Critical Care Division
Infusion, Syringe Pumps
Patient Monitors, Oxygen Concentrator,
1/2/3 Para Monitors
Ophthalmology Division
LCD Vision Chart, A-Scan, B-Scan
Clinical Division
Quick Vital Sign, Infusion Controller



30-03-2020 அன்று தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடி பழனிசாமி அவர்களை நேரில் சந்தித்து சொந்த ஊருக்குத் திரும்பமுடியாமல் வெளிமாநிலங்களில் தவித்துவரும் நம் இனமக்களை மீட்டுவந்து சேர்க்கக் கோரும், கோரிக்கை மனுவை அல்ட்ரா கோல்டு சிமெண்ட் ஆலை உரிமையாளரும் காவலிபாளையம் கெந்தவங்குருவர் குலத்தைச் சேர்ந்தவருமான கரூர் திரு. **S.பாஸ்கர்** அவர்கள் அளித்தபோது எடுத்த படம்.

உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்ற நம் இனச் சொந்தங்களுக்கு வாழ்த்துக்கள்!



S. ஆறுச்சாமி
(மதுரை மக்கடையர் குலம்)
6வேது வார்டு, சின்னக்குமாரபாளையம் ஊராட்சி
உடுமலைப்பேட்டை வட்டம்.



A. மகேஷ்வரி
(பருத்தியூர் கோலவார் குலம்)
8வேது வார்டு, குறிச்சிக்கோட்டை ஊராட்சி
திருப்பூர் மாவட்டம்.





திருப்பூரில் கொரோனா கண்டறிய தானியங்கி கருவி



திருப்பூர் மாவட்டம் உடுமலை அரசு மருத்துவமனையில் கொரோனா வைரஸ் கண்டறியும் தானியங்கி கருவியினை அமைச்சர் அரசு கேபிள் டிவி நிறுவன தலைவர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு துவக்கி வைத்தார்.

நிகழ்வில் உடுமலை கோட்டாட்சியர் ரவிக்குமார், டிஎஸ்பி ஜெயச்சந்திரன், வட்டாட்சியர், சுகாதாரத்துறை அதிகாரிகள், நகராட்சி அதிகாரிகள், உடுமலை அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் முருகன், மருத்துவர்கள், பணியாளர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





கரூரில் உள்ள நமது 24 மனை தெலுங்குச் செட்டியார்கள் இன மக்களுக்கு கொரோனா நிவாரணமாக 100 மூட்டை அரிசியை அல்ட்ரா கோல்ட் சிமெண்ட் ஆலை உரிமையாளர் திரு.S.V.S.பாஸ்கர்-திருமதி.சாந்தி பாஸ்கர் (காவலிபாளையம் கெந்தவங்குருவர் குலம்) ஆகியோர் அன்பளிப்பாக வழங்கினார்கள்.


MEGA EXCHANGE OFFER
சுலப தவணையில்
ஸ்மார்ட்போன்கள்
UPTO 60% DISCOUNT
ZERO DOWN PAYMENT
உங்கள் பழைய மொபைலை கொடுத்து சுலபத்தவணையில்
புதிய ஸ்மார்ட்மொபைலுக்கு மாறுங்கள்
Karbonn
K59 Star
JODI OFFER
₹1599
Lenovo K10 Note
4GB + 64GB
45% OFF
NOW@
₹8999
Realme 6
6GB + 128GB
AVAILABLE NOW
Redmi note 8 pro
6GB + 64GB
₹1000 DISCOUNT
*Terms & Conditions apply. Discount on MRP
CALL : 99406 88855
STAY CONNECTED
INSTAGRAM
FACEBOOK
YOU TUBE
பூர்விகா



சித்திரை முதல் நாளில் 'கனி காணல்' என்ற சம்பிரதாயத்தை பின்பற்றி வருகின்றனர். அதாவது, சித்திரை மாதம் பிறப்பதற்கு முந்தைய தினத்திற்கு முதல்நாள் இரவிலேயே, இரவு சாப்பாடு முடிந்தபிறகு பூஜை அறையை தூய்மை செய்து கோலமிட்டு வைத்து விடுவார்கள். பொன், வெள்ளி, பழங்கள் வீட்டிலுள்ள பொன், வெள்ளி நகைகள், ஆபரணங்கள், பணம், நிலைக் கண்ணாடி, வெற்றிலை, பாக்கு, பழங்கள், தேங்காய், மலர்கள் முதலிய மங்கலப் பொருள்களை தயாரித்து, ஒரு மனையின் மீது கோலமிட்டு, பூஜைக்குரிய தெய்வத்தின் முன் வைப்பர்.

மங்கலம் செழிக்கும் சித்திரை மாதப் பிறப்பன்று அதிகாலை முதன் முதலாக வீட்டிலேயே வயது முதிர்ந்த பெண் எழுந்து குளித்து புத்தாடை உடுத்தி கொள்வார். பின்பு அவர், இறைவன் முன்பு குத்துவிளக்குகளையும், ஊதுவத்திகளையும் ஏற்றி வைப்பார்.

அதற்கு பின்பு, அவர் வீட்டில் தூங்கும் ஒவ்வொருவரையும் தட்டி எழுப்பி, கண்களை மூடிய நிலையிலேயே சுவாமியின் முன்பு அழைத்துச் சென்று, கண்களை திறக்கச் சொல்வார். பூஜைக்குரிய தெய்வத்தையும், புத்தாண்டு நிகழ்ச்சிக்காக பூஜைக்கு வைத்துள்ள மங்கலப் பொருட்களையும் முதன் முதலாக தரிசிக்கும்படி செய்வார். இவ்வாறு செய்தால் இனிவரும் நாட்கள் முழுவதும் மகிழ்ச்சி நிரம்பியும் மங்கலப் பொருள்கள் செழித்தும் இருக்கும் என்பது நம்பிக்கை.

சித்திரை திருவிழாக்கள்

சித்ரா பவுர்ணமி, ராமானுஜ ஜெயந்தி, சங்கர ஜெயந்தி, நரசிம்ம ஜெயந்தி என பல்வேறு சிறப்புகள் இடம்பெற்றுள்ளன.

அட்சய திருதியை எனும் அற்புத நாளும் சித்திரையில் வரும்.

ராமானுஜ ஜெயந்தி

இல்லறத்தில் இருந்து விலகி துறவரம் பூண்ட ராமானுஜர், அது முதல் யதிராஜர் என்று பெயர் கொண்டார். திருக்கோட்டியூர் நம்பியிடம் பல முறை முயன்று வைஷ்ணவ ரகசிய அர்த்தம் கற்றுக் கொண்டார். குரு ஆணையை மீறி, அதனை கோயில் கோபுர உச்சியில் இருந்து அனைவருக்கும் சொன்னார்.

குரு ஆணையை மீறிய எனக்கு மட்டும் நரகம் கிட்டினால் பரவாயில்லை. இதைக் கேட்ட மற்ற அனைவரும் சொர்க்கம் போவார்களே என்று பெருந்தன்மையுடன் சொன்னவர்.

சுமார் 120 ஆண்டுகள் நிறைவாக வாழ்ந்து பிறகு இறைவனடி சேர்ந்தார்.

சங்கர ஜெயந்தி

சித்திரை மாதத்தில் கேரள மாநிலம் காலடி என்ற ஊரில் பிறந்தவர் சங்கரர். இவர் ஆறு வயதில் ஞானம் பெற்றார். நூல் இயற்றும் ஆற்றலும் பெற்றவர்.

எட்டு வயதில் துறவு கொள்ள விரும்பினார் சங்கரர். அதற்கு அவரது தாய் சம்மதிக்கவில்லை. ஒரு முறை ஆற்றில் குளிக்கச் சென்றபோது அவரது காலை முதலை ஒன்று கவ்விக் கொண்டது. சங்கரர் துறவு மேற்கொள்ள அன்னை அனுமதித்த பிறகே சங்கரரின் காலை முதலை விடுவித்தது.

பஜகோவிந்தம், பஜகோவிந்தம் என்று அவர் பாடியது இன்றும் மனத் தெளிவு தரும் மந்திரமல்லவா? இவர் பாடிய கனகதாரா ஸ்தோத்திரம் வீட்டில் செல்வத்தையும் வளத்தையும் பெருக்கும்.

நரசிம்ம ஜெயந்தி

சித்திரையில் பிறந்த பிரஹலாதன் கதை அனைவரும் அறிந்ததே. அந்தக் கதையின் அவதாரப் புருஷர் நரசிம்மர். அன்றைய தினம் நரசிம்மருக்கு பானகம் நைவேத்யம் செய்ய வேண்டும். அதற்கு காரணம் அவர் உக்கிரமாக இருப்பதைத் தணிக்க. இதில் இன்னொரு சிறப்பு



என்னவென்றால், நரசிம்ம ஜெயந்தி கோடையில் வருவதால் மக்கள் தாகம் தணிவதன் பொருட்டும் இப்படி ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம்.

மேலும், இந்த கதையில் ஒரு அறிவியல் விஷயம் உள்ளது. உங்கள் குழந்தை வயிற்றில் இருக்கும் போது நீங்கள் என்ன பேசினாலும் செய்தாலும் அது அந்தச் சிசுவையும் பாதிக்கும் என்பதுதான். பிரஹலாதன் தன் தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போது நாராயண நாமம் கேட்டுக் கொண்டிருந்த படியால், அவனுக்கு நாராயணன் மீது பக்தி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

சித்திரா பௌர்ணமி

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தன்று வரும் பௌர்ணமி சித்திரை பௌர்ணமி ஆகும்.

ராசிச் சக்கரத்திலுள்ள 12 ராசிகளில் 6 ஆவதான கன்னிராசியிலும், 7ஆவதான துலாராசியிலும் உள்ள நட்சத்திர மண்டலத்துக்கு சித்திரை எனப் பெயர். அசுபதி முதலான 27 நட்சத்திரங்களில் 14 ஆவது நட்சத்திரம். சித்திரை பௌர்ணமியெனப் புகழ் பெற்ற தினத்தன்று சந்திரன் சித்திரை நட்சத்திரத்திலோ அதற்கு அடுத்தோ இருக்கும் எனக் கலைக்களஞ்சியம் கூறும்.

சித்ரா நதி

நெல்லை மாவட்டம் திருக்குற்றால மலையிலுள்ள சித்ரா நதி சித்திரை பௌர்ணமி அன்றுதான் உற்பத்தியானதாகக் கருதப்படுகிறது.

கல்வெட்டில் சித்திரை

திருச்சி நெடுங்கள நாதர் திருக்கோயிலில் உள்ள கி.பி.1011ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சித்திரைத் திருவிழாவின் போது 550 சிவயோகிகளுக்கு அன்னதானம் செய்ய நிலம் தானம் தரப்பட்டதைச் சொல்கிறது

இந்திர விழா

பூம்புகாரில் நடந்த இந்திர விழா சித்திரை பௌர்ணமியில் தான் தொடங்கப்பட்டது. இவ்விழாவை சோழன் தூங்கெயில் எறிந்த தொடித்தோள்செம்பியன்துவக்கி வைத்தான் என மணிமேகலை கூறுகிறது.

மகாபாரதத்தில்

பாரதப் போர் முடிந்து தர்மர் ஆட்சி பொறுப்பு ஏற்றதும் அசுவமேத யாகம் செய்ததும் இந்த நாளில் தான்.



சித்திரை மூலிகை

சித்திரை பௌர்ணமி அன்று நிலவின் ஒளியில் பூமியில் ஒருவகை உப்பு பூரித்து வெளிக்கிளம்பும். இதை பூமி நாதம் என்பர். இந்த உப்புத் தூள் மருந்துக்கு வீரியமளிக்கும். இளமையையும் மரணமில்லாத வாழ்வையும் கொடுக்கும்.

கன்னியாகுமரியில்..

கன்னியாகுமரியில் சந்திரோதயமும், சூரிய அஸ்தமனமும் சித்திரை பௌர்ணமி அன்று ஒரே நேரத்தில் நடக்கும்.

சித்திரகுப்தரும் சித்திரை பௌர்ணமியும்

சித்திரை பௌர்ணமியன்று தமிழகம் முழுவதும் சித்திரகுப்தர் வழிபடப்படுகிறார். யமதர்மராஜாவின் கணக்கரான இவர் சித்திரை பௌர்ணமியன்றுதான் அவதரித்தார் என புராணங்கள் கூறும்.

காமாட்சி அம்மன் கோவில்களில் திருக்கல்யாணம்

சித்திரா பௌர்ணமியன்று தமிழ்நாட்டில் உள்ள காமாட்சியம்மன் கோவில்களில் ஸ்ரீ காமாட்சி தேவிக்கும் - ஸ்ரீ ஏகாம்ப ரேஸ்வரருக்கும் திருக்கல்யாண புனித நிகழ்வு நடைபெறும். அன்று மாலை மணம் புரிந்த தெய்வத் தம்பதிகள் பக்தர்கட்குத் காட்சி தர மேளதாளத்துடன் திருஉலா வருவர்.

சமூக மக்களுக்கு உதவிய கரங்கள்




கொரோனா ஊரடங்கு தடை உத்தரவு அமலில் உள்ள நிலையில் நமது சமூகத்தை சேர்ந்த பள்ளிபாளையம் மருந்து மொத்த விற்பனையாளர் மெடிக்கல் கே. வெங்கட்ராமன் அவர்கள் தனது சொந்தப் பணம் ரூ.50 ஆயிரத்தில் அரிசி, பருப்பு, எண்ணெய், ஷாம்பு, சோப்பு, கோதுமை ரவை, புளி, பவுடர், தேங்காய் எண்ணெய், பொட்டுக்கடலை, சாம்பார் தூள், மல்லித்தூள், மஞ்சள்தூள், மசாலா தூள், வரமிளகாய், போன்ற 17 பொருட்கள் அடங்கிய கிப்ட் பை தயாரிக்கப்பட்டு நமது சமூகத்தை சேர்ந்த மிகவும் வறுமையில் உள்ள 70 குடும்பங்களை தேர்வு செய்து அவர்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி கடந்த 7.04.2020 செவ்வாய்க்கிழமை அன்று கருணா மஹாலில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட நமது சமூகத்தின் தொழிலதிபர் வி.டி.கருணாநிதி, சமூகத்தின் முன்னால் பெரியதனம் கலைப்புலி கே.செல்வராஜ், ஆர்.மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சமூக இடைவெளியை கடைபிடித்து நமது சமூகத்தை சேர்ந்த 70 குடும்பங்களுக்கு மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தனது சொந்தப் பணத்தில் மளிகைப் பொருட்களை வழங்கிய கே.வெங்கட்ராமன் (கொரவையார் கோத்திரம்) அவர்களை பலரும் மனமார பாராட்டினார்.

- அ.சுரேஷ், குலமுரசு நிருபர், பள்ளிபாளையம்.


வண்ணாரப்பேட்
ஸ்ரீ சாந்தி சாரிஸ்
டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
மொத்த விலைக்கடை
SHANTHI SAREES
ஸ்ரீ சாந்தி சாரிஸ்
NO.1 SHOP
New Collections ! New Style ! New Fashion
SS No.1 Shop
New சாந்தி சாரிஸ்
வண்ணாரப்பேட்
New SHANTHI SAREES
SUPER READYMADES
NO.1 SHOP
ஹோல்சேல் பிரைஸ்ல...
நாங்க மட்டும் சென்னையில...
சூப்பர் ரெடிமேட்ஸ்
No.59, M.C. ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 21.
✆: 044 - 25900181 | 25901181 | 25902183

திருமணத் தடை நீக்கும்

திருமணஞ்சேரி



“நாகப்பட்டினம் மாவட்டம் மாயவரத்தில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது **திருமணஞ்சேரி.**

இங்குள்ள பெருமான் **அருள்வள்ளநாதர் என்னும் உத்வாகநாதர்.** அம்பிகைக்கு **கோகிலாம்பாள் என்றும், யாழினும் மென்மொழியாள்** என்றும் பெயர்.”

இந்த திருத்தலத்துக்கு அப்படி என்ன விசேஷம்? தனக்காகவே தவமிருந்த தேவியை, சிவபிரான் திருமணம் செய்து கொண்ட தலம் இந்தத் திருமணஞ்சேரி, பரத முனிவர் செய்த யாகத்தின்போது வெளிப்பட்டாள் உமாதேவி.

கோகிலாம்பாள் என்ற பெயரில் வளர்ந்த தேவியை, சிவபெருமான் இங்கே மணந்து கொண்டார். இந்த திருமணத்துக்கான கங்கண தாரணமும் மங்கள ஸ்நானமும் நடைபெற்ற தலம் திருவேள்விக்குடி. பாலி கைகள் அமைத்த இடம் குறுமுனைப் பாலை, இறைவனை எதிர்கொண்டு அழைத்த தலம், எதிர்கொன்பாடி.

இதை, மேலைத் திருமணஞ்சேரி என்றும் சொல்வார்கள். இவையெல்லாம், இந்தத் திருமணஞ்சேரியின் அருகே அமைந்துள்ள மற்ற தலங்கள்!

அம்பிகையை, பெருமான் மணம் புரிந்தார் என்பது மட்டும் இங்கு சிறப்பல்ல. யோகத்தில் ஆழ்ந்து தட்சிணாமூர்த்தியாக வீற்ற சிவபிரான் மீது மலர்க்கணையைத் தொடுத்த மன்மதன், நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்டான். அவன் மனைவி ரதிதேவி, கண்ணீர்விட்டுக் கதறினாள். அவளுடைய பக்திக்கு இரங்கி, மன்மதனை மீண்டும் உயிர்த்தெழச் செய்தார் சிவபெருமான். அப்படி, மன்மதன் உயிர்த்தெழுந்த தலமும் இந்தத் திருமணஞ்சேரிதான்!

இதுமட்டுமல்ல. அபூர்வமான திருமணக் கோலத்தில், கல்யாண சுந்தரராக பெருமான் இங்கே காட்சியளிக்கிறார் என்பதும் இதன் தனிச்சிறப்பு!

கோகிலாம்பாள் சமேத கல்யாண சுந்தரருக்கு மாலை சார்த்தி வழிபாடு செய்வதால், விரைவில் திருமணம் கை கூடுகிறது. தடைபட்டு வரும் கல்யாணங்கள் கண்டிப்பாக நடந்தேறுகின்றன என்பதும் கண்கூடான அனுபவம்!

பூஜைப் பொருட்களை வாங்கிக் கொண்டு ஆலயத்தினுள்ளே சென்று, முதலில் கொடிமரத்தின் முன் வழிபடுங்கள்.

அடுத்த செல்வ கணபதியை வணங்கி விட்டு உள்ளே செல்லுங்கள். நெய்தீப மேடையில், ஐந்து தீபங்களை ஏற்றுங்கள். அதன் அருகில் உள்ள திருமண பிரார்த்தனை கூடத்தில் சென்று அமருங்கள்.

பூஜைப் பொருள்களை அர்ச்சகர் வந்து பெற்றுக்



கொள்வார். திருமணப் பிரார்த்தனைக்கான சிறப்பு பூஜை, ஸ்ரீ கல்யாண சுந்தரேஸ்வரருக்கு நடைபெறும். மனமொன்றி, ஆழ்ந்த நம்பிக்கை யுடன் பூஜையில் அமர்ந்திருங்கள்.

பூஜை முடிந்தவுடன், உங்களிடம் பிரசாதங்களைத் தருவார்கள்.

திருமணப் பிரார்த்தனை செய்து கொண்டவர்கள், வீட்டுக்கு வந்ததும் மறுநாள் காலை 7 மணிக்கு நீராடி, பிரசாதமாக அளித்த எலுமிச்சம் பழத்தை அறுத்து சாறு பிழிந்து, நீர் கலந்து பருக வேண்டும். சர்க்கரை அல்லது உப்பு சேர்த்துப் பருகக் கூடாது.

வீட்டின் பூஜை அறையில் - பூஜை அறை தனித்து இல்லாவிட்டால், சாமி படத்தின் முன்பு ஒரு தீபத்தை ஏற்றிவிட்டு, ஆலயத்தில் இருந்து அளித்த மாலையை எடுத்து அணிந்து கொள்ளவும்.

பிறகு கீழே விழுந்து வணங்க வேண்டும். பின்பு, மாலையை துணிப்பையில் போட்டு பத்திரப்படுத்த வேண்டும். மறுநாள் முதல் ஆலயத்தில் வழங்கப்பட்ட மஞ்சள், விபூதி, குங்குமம் இவற்றை தினமும் உபயோகிக்க வேண்டும்.

பெண்களின் கவனத்திற்கு:

வீட்டு விலக்காகும் சமயத்தில் ஏழு தினங்களுக்கு பிரசாதத்தை உபயோகிக்கக் கூடாது. இன்னொரு முக்கிய விஷயம்: யாருக்கு அந்தப் பிரசாதம் வழங்கப்பட்டதோ, அவர்கள் மட்டும்தான் அதை உபயோகிக்க வேண்டும்.

இந்தத் திருமணப் பிரார்த்தனையை ஏராளமானவர்கள் வந்து செய்து, பலன் பெற்றிருக்கிறார்கள்.

திருமணம் நிகழ்ந்த பிறகு, தன்னுடைய துணையுடன் மீண்டும் வந்து பிரார்த்தனையை





நிறைவு செய்யலாம். ஆலயத்தில் வழங்கப்பட்ட மாலையை, கணவன்-மனைவி இருவருமாக எடுத்து வந்து சமர்ப்பித்து இந்த இருவருமாக எடுத்து வந்து சமர்ப்பித்து இந்த பிரார்த்தனையை நிறைவு செய்ய வேண்டும்.

குழந்தைப்பேறுக்கு:

இங்குள்ள மங்கள ராகுவுக்கு, ஒவ்வொரு அமாவாசை நாளிலும், ஆலயத்தின் திருக்குளத்தில் நீராடி வந்து பால்பாயசம் நிவேதித்தால், புத்திரப் பேறு வாய்க்கும் என்பது மற்றுமொரு சிறப்பான அம்சம்.

கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 6.30 மணி முதல்
பகல் 1.30 மணி வரை.
மாலை 3.30 மணி முதல்
இரவு 8.30 மணி வரை.

ஆலய முகவரி:

அருள்மிகு உத்வாகநாத சுவாமி திருக்கோயில்,
திருமணஞ்சேரி,
மயிலாடுதுறை வட்டம்,
நாகை மாவட்டம் - 609 801.
தொலைபேசி எண்:
04364 - 235002



சமூக அறப்பணியில் 24 MTC ஏழூரு பூர்வீக உறவுகள்

நாமக்கல், ராசிபுரம் பகுதியில் ஏழூரு பூர்வீக சமூக அறப்பணி சார்பில், ஊரடங்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது. பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான அரிசி, மளிகை, காய்கறி போன்றவை வழங்கப்பட்டன. மேலும், போலீசார் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு 5500 முகக் கவசங்கள் வழங்கப்பட்டன. வாட்ஸ்அப் குழுவின் மூலம் அறப்பணியின் ஒருங்கிணைப்பாளர் திருச்சி செல்வகுமார் மற்றும் நிர்வாகிகள் ரூ. 1.20 லட்சம் மதிப்பில் உணவுப் பொருட்கள், ரூ. 60 ஆயிரம் மதிப்பில் முகக் கவசங்கள், கள ஆய்வாளர்கள் மூலம் 100க்கும் மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.



கரூரில் கொரோனா நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சி





19.04.2020 ஞாயிற்றுக்கிழமையன்று கரூரில் உள்ள நமது 24 மனை தெலுங்குச் செட்டியார்கள் இன மக்களுக்கு கொரோனா நிவாரணமாக 100 மூட்டை அரிசி மற்றும் ரூ.750 மதிப்புள்ள 18 மளிகை பொருட்களடங்கிய தொகுப்பை கரூர் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சமுக இளைஞர் அணியினர் அன்பளிப்பாக வழங்கினார்கள்.



திண்டுக்கல்லில் கொரோனா நிவாரண உதவி

திண்டுக்கல்லில் கொரோனா வைரஸ் ஊரடங்கு உத்தரவு காரணமாக தொழில் நலிவடைந்த நமது சமுதாய மக்களுக்கு தலைமை சங்கத் தலைவர் R. நடராஜன் அவர்கள் சார்பில் அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் சாமான்கள் 300 குடும்பங்களுக்கு திண்டுக்கல் உறவினர்கள் வழங்கினார்கள்.

- முதல் ஹைட்ரஜன் பலூனை தயாரித்தவர் சார்லஸ்.
- தீப்பெட்டியை கண்டுபிடித்தவர் ஜான்வாக்கர்.
- இந்தியாவின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் ஈடன் கார்டன் (கொல்கத்தா).
- குதுப்மினார் கட்டிடத்தின் உயரம் 240 அடிகள்.
- மாவீரன் பகத்சிங் மரணத்தின் விளிம்பில் கடைசியாய் சொன்ன வார்த்தைகள், இன்குலாப் ஜிந்தாபாத்.
- ஐ.நா.சபை வெள்ளி விழாவில் இசைக்கச்சேரி நடத்திய கர்நாடக இசைப் பாடகி எம்.எஸ். சுப்புலட்சுமி ஆவார்.
- முதன் முதலில் திருக்குறளுக்கு உரை எழுதியவர் மணக்குடவர்.





உறுதியான பாதுகாப்பு
அல்ட்ரா
கோல்டு
சிமெண்ட் (PPC)
S.விஜயபாஸ்கர்
நிர்வாக இயக்குநர்
PORTLAND POZZOLANA CEMENT
FLY ASH BASED
ULTRA
GOLD
ULTRA GOLD
BASKAR CEMENTS & PRODUCTS
BASKAR CEMENTS & PRODUCTS
நிர்வாக அலுவலகம்: 9/454-4, குமரன் நகர், வீனஸ் பள்ளி பின்புறம், சி.ஆ. கோவில் ரோடு, கரூர் - 639 001.
தொழிற்சாலைகள்: கரூர், சென்னை, தூத்துக்குடி.
போன் : 04324 - 240295 செல்: 98424 62995 / 97509 62991
இ-மெயில்: baskarcements@gmail.com வெப்சைட்: www.baskarcements.com

உலகை அச்சுறுத்தும்

கொரோனா கோவிட்-19



உலக அளவில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமாக பரவி கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இச்சூழலில் கொரோனா குறித்த அடிப்படை தகவல்களை பிபிசி, ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனங்கள் மற்றும் மருத்துவ இணையதளங்களிலிருந்து சேகரித்த தகவல்களைத் தொகுத்து இங்கு தருகிறோம்.

- **கொரோனா வைரஸ் அல்லது கோவிட்-19 என்றால் என்ன?**

கொரோனா வைரஸ்கள் ஒரு பெரிய குடும்பத்தை சேர்ந்தவை. அது மனிதர்கள் மற்றும் விலங்குகள் மத்தியில் பல நோய்களை உருவாக்கும். மனிதர்களில் இந்த கொரோனா வைரஸ் சளி முதல் சார்ஸ் வரையில் உண்டாக்கக் கூடியவை.

தற்போது உலகின் பல்வேறு நாடுகளில் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் இந்தத் தொற்றுக்கு **கோவிட்**-19 எனப் பெயரிட்டுள்ளனர். இந்தத் தொற்று சமீபமாக கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸால் ஏற்படுகிறது. இது விஞ்ஞானிகளால், சிவியர் அக்யூட் ரெஸ்பிரேட்டரி சிண்ட்ரோம் கொரோனா வைரஸ் 2 அல்லது Sars-CoV-2 என்று பெயரிடப்பட்டுள்ளது.

- **கொரோனா எங்கிருந்து வந்தது?**

இந்த **SARS-COV-2** வைரஸ் கடந்த டிசம்பர் மாதம் சீனாவில் உள்ள விலங்குகள் சந்தையிலிருந்து, விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. எந்த விலங்கு அல்லது பறவை எது என்று இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இருப்பினும் வௌவால்கள் மூலம் பரவியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

- **கொரோனா வைரஸ் தொற்றின் அறிகுறிகள் என்ன?**

இந்த கொரோனா கோவிட் 19 முதன்முதலில் காய்ச்சலாக தொடங்கும். பின் வறட்டு இருமல் அதன்பின் ஒரு வாரம் கழித்து சுவாசக் கோளாறுகள் ஏற்படும். ஆனால் இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் அனைவரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் என்று அர்த்தமில்லை. இந்த அறிகுறிகள் பிற பொதுவான வைரஸாலும் ஏற்படக்கூடியதே.

தனித்திருப்போம் தற்காத்துக்கொள்வோம்



இந்த கோவிட் 19 தீவிரமாக இருந்தால், நிமோனியா, சிறுநீரக பழுது, தீவிர சுவாசப் பிரச்சனை, தீவிர நிலையில் உயிரிழப்பும் ஏற்படலாம். பொதுவாக இந்த அறிகுறிகள் சராசரியாக ஐந்து முதல் 14 நாட்களில் தெரியலாம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் சிலருக்கு அறிகுறி இல்லாமலே கொரோனா தொற்று இருப்பதற்கான வாய்ப்பும் உள்ளது என்றும் கூறப்படுகிறது.

சிலருக்கு உடல் நலக்குறைவு இருப்பது தெரிவதற்கு முன்னரே அவரால் தொற்று மற்றவர் களுக்கு பரவலாம் என்பதால் தனிமைப்படுத்துதல், ஊரடங்கு போன்றவை வலியுறுத்தப்படுகிறது.

- **கொரோனா ஏற்பட்டால் இறப்பு நிச்சயமா?**

கொரோனா தொற்று குறித்த அச்சம் பரவலாக இருந்தாலும், இதனால் இறப்பு ஏற்படும் விகிதம் மிகவும் குறைவே. ஒரு சதவீதத்திலிருந்து 2 சதவீதம் வரையே இறப்பு விகிதம் என கூறப்படுகிறது. ஆனால் அதை உறுதியாக கூற முடியவில்லை.



- **கொரோனாவிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்வது எப்படி?**

- ஒரு மணிநேரத்திற்கு ஒருமுறை கைகளை சுத்தம் செய்து கொள்ளவேண்டும். வெளியில் சென்று வந்தாலும், சாப்பிடும் முன்பு, வேறு ஏதேனும் வேலைகளுக்குப் பிறகு, வளர்ப்புப் பிராணிகளைத் தொட்ட பிறகு என எந்த ஒரு செயல்பாட்டிற்கும் முன்போ பின்போ சோப் பயன்படுத்தி கைகளைக் குறைந்தது 20 நொடிகள் கழுவ வேண்டும். விரல் இடுக்குகள், நகத்தின் மறைவுப் பகுதிகள் முதல் முழங்கை வரை உள்ள பகுதிகளை நன்றாகத் தேய்த்துக் கழுவுங்கள்.



- வெளியே சென்று வந்தவர்கள் கை கழுவியபின் குளிப்பது அல்லது முகம் மற்றும் கால்களைக் சோப்பால் கழுவுவது கூடுதல் பாதுகாப்பளிக்கும்.
- கைகளைக் கழுவாத நேரங்களில் கண்கள், மூக்குகள் மற்றும் வாய்ப்பகுதியைத் தொடுவதைத் தவிர்க்கவும். அதுபோன்ற செயல்பாடுகள் மூலம் வைரஸ் உங்கள் உடலில் பரவக்கூடும்.
- நீங்கள் இருமினாலோ அல்லது தும்மினாலோ டிஷ்யூ பேப்பர்களைப் பயன்படுத்துங்கள். அதை மறக்காமல் மூடிய குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுக் கைகளைக் கழுவுங்கள். கைக்குட்டைகளைக் காட்டிலும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் டிஷ்யூக்களை அதிகம் பயன்படுத்துங்கள். டிஷ்யூ பேப்பர் இல்லை என்றால் உங்கள் முழங்கை மூட்டைப் பயன்படுத்தி இருமுங்கள்.
- கைப்பிடிகள், லிஃப்ட் பொத்தான்கள், ஏடிஎம் இயந்திரங்கள் போன்ற அதிகம் பேர் தொடும் பொத்தான்களைத் தொடுவதைத் தவிருங்கள். சிறு குச்சி அல்லது பேனாவைப் பயன்படுத்தி இதுபோன்ற செயல்பாடுகளைச் செய்யலாம். கடைகளுக்குச் செல்லும்போது அங்கிருக்கும் டேபிள், சேர் போன்ற பொதுமக்கள் தொடும் பொருட்களை தொடுவதைத் தவிர்க்கவும்.
- காய்ச்சல், இருமல், சுவாசக் கோளாறு போன்ற அறிகுறிகள் இருப்பவர்களிடமிருந்து தள்ளி இருங்கள். உங்களுக்கு காய்ச்சல், இருமல், சுவாசப் பிரச்சனைகள் இருந்தால் எங்கும் போகாமல் உங்களை நீங்களே தனிமைப் படுத்திக்கொண்டு வீட்டிலேயே இருங்கள்.
- மற்றவருடன் உரையாடும் பொழுது சற்று இடைவெளியுடன் நின்று உரையாடுவது சிறந்தது.
- அதிக கூட்டங்கள் இருக்கும் பகுதிக்கு செல்வதை முடிந்தவரை தவிர்க்கவும்.
- வெளியில் செல்லும்போது மூக்கு மற்றும் வாய்ப் பகுதியை நன்கு மூடும்படியாக முகமூடி அல்லது சுத்தமான காட்டன் துணியால் தயாரித்த முககவசங்களை அணிந்து செல்லவும்.



- உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருந்தால் இந்த வைரஸ் தாக்குவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கும். எனவே நோய் எதிர்ப்பு சக்தியை (Immunity) அதிகரிக்கும் உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

- **கொரோனா உள்ளது என்றால் முதலில் என்ன செய்ய வேண்டும்?**

கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட இடங்களுக்கு பயணம் செய்திருந்தாலோ அல்லது பயணம் செய்தவருடன் தொடர்பில் இருந்தாலோ, அந்த நபரை முதலில் வீட்டிலேயே இருக்க வைக்கவும். குறிப்பாக லேசாக அறிகுறி தெரிந்தாலே அது சரியாகும் வரை எவரிடமிருந்தும் நான்கடி விலகியே இருக்கவேண்டும். மாஸ்க் (முகக்கவசம்) அணிந்து கொள்வது அவசியம்.

அறிகுறியுள்ள நபரை மருத்துவரிடம் அழைத்துச் சென்றாலும் அது முழுமையாக உறுதிப்படுத்தப்படுமா என்பது தெரியவில்லை. ஏனென்றால் வைரஸ் தொற்று ஏற்பட்டு அது அறிகுறிகள் காட்டுவதற்கு 14 நாட்கள் எடுத்துக் கொள்ளும்.

உங்கள் மாநில அரசின் கொரோனா உதவி எண்ணைத் தொடர்பு கொண்டு சுகாதார அதிகாரியின் ஆலோசனையை முதலில் பெறுங்கள். அதன் பிறகு அவர்கள் வீட்டிற்கே வந்து ஆரம்பகட்டப் பரிசோதனைகளை மேற்கொள் வார்கள் அல்லது அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வார்கள்.

- **அதிகம் பாதிப்பு யாருக்கு?**

உலக சுகாதார நிறுவனம் 56000 பேரிடம் செய்த ஆய்வில், 6 சதவீதம் பேரின் உடல்நிலை மோசமாக உள்ளது என்றும் அவர்களுக்கு - நுரையீரல் பழுது, செப்டிக் ஷாக் (தொற்றிலிருந்து நம்மைக் காக்க நோய் எதிர்ப்பு சக்தி ரத்தத்தில் வெளியிடும் ரசாயனம் தவறாக நமக்கு ஆபத்தை உருவாக்கும் நிலை), உறுப்புகள் செயலிழப்பு மற்றும் இறப்பு ஏற்படும் ஆபத்து ஆகியவை தென்படுகிறது.

14 சதவீதமானோருக்கு தீவிர அறிகுறிகள் காணப்படுகின்றன. - சுவாசிப்பதில் சிரமம் மற்றும் நுரையீரலுக்குள் சரியாக காற்று செல்லாமை

80 சதவீதம் பேருக்கு மிதமான அறிகுறிகள் - காய்ச்சல், இருமல் சிலருக்கு நிமோனியாவும் இருக்கலாம்.


வயதானவர்கள், ஆஸ்துமா, நீரிழிவு மற்றும் இதய நோய்கள் உள்ளவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படலாம் என்று கூறுகிறது.

- **கொரோனாவை குணப்படுத்த முடியுமா?**

தற்சமயம் கொரோனா தொற்றை குணப் படுத்தவோ தடுக்கவோ மருந்துகள் இல்லை. அதற்கான ஆய்வுகள் உலக அளவில் நடந்து வருகின்றன.

- **கொரோனா தொற்று எவ்வாறு பரவுகிறது?**

கொரோனா பாதிக்கப்பட்ட ஒருவர் இருமும்போது, அந்த வைரஸ் காற்றில் கலக்கலாம். இதை சுவாசித்தாலோ அல்லது அந்த வைரஸ் துகள்கள் பட்ட இடத்தைத் தொட்டுப் பின்





கண்கள், மூக்கு அல்லது வாயை தொட்டாலோ தொற்று ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

இருமும் போதோ அல்லது தும்மலின் போதோ டிஷ்யூ வைத்துக் கொள்ள வேண்டும். கைகளை கழுவாமல் முகத்தை தொடக்கூடாது. மேலும் தொற்று இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நபர்களிடமிருந்து தள்ளி இருத்தல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் மலத்திலிருந்து இந்த வைரஸ் தொற்று பரவ வாய்ப்பில்லை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

- **கொரோனா வைரஸை Pandemic என்று குறிப்பிட காரணம் என்ன?**

Pandemic என்பது உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் ஒரே நேரத்தில் மக்களிடையே பரவும் தொற்றாகும்.

உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ், வைரஸை தடுக்க நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் நிலையின் ஆபத்தை விவரிக்கவே இந்த பதம் இப்போது பயன்படுத்தப்படுகிறது எனக் கூறியுள்ளார்.

ஒரு வைரஸ், மக்களிடமிருந்து மக்களுக்கு எளிதாக பரவினால் அது தொற்று எனப்படுகிறது.

கடைசியாக 2009ல் வந்த பன்றி காய்ச்சல் உலகளவில் பரவும் தொற்றாக அறிவிக்கப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

மேலும் கொரோனாவுக்கு தடுப்பு மருந்தும் இல்லை, வேறு சிகிச்சையும் இல்லை. இது உலகம் முழுவதும் வேகமாக பரவி வருகிறது.

எனவே உலக சுகாதார நிறுவனம் அனைத்து நாடுகளிடமும்,

- உடனடி சிகிச்சை தரும் முறையை அதிகரிக்கவும்
- மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றி கொள்ளும் முறை குறித்து அவர்களுக்கு எடுத்துரைக்கவும்
- கொரோனா வைரஸ் எனப்படும் கோவிட் 19ஆல் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து, தனிமைப் படுத்தி, சோதனைக்குள்ளாக்கி அவர்களுக்கு சிகிச்சை வழங்க வேண்டும்.

இவ்வாறு ஒரு நோயை தொற்று என அறிவிப்பது புதிது கிடையாது. உலகம் முழுவதும் பரவிய பல நோய்கள் பல்வேறு காலங்களில் தொற்று என அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்பானீஷ் ஃப்ளூ,ஏசியன் ஃப்ளூ, ஹாங்காங் ஃப்ளூ, பன்றி காய்ச்சல், ஹெச்ஐவி/ எய்ட்ஸ் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

- **கொரோனா வைரஸ் அச்சங்களுக்கு நடுவில் உங்கள் மனநலத்தை பாதுகாக்கும் வழிகள்**

கொரோனா தொற்று பரவும் செய்திகள், தகவல்கள் தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக இடைவெளியின்றி நமக்கு கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. இதனால் இயல்பாகவே பதற்றம் அடைபவர்கள் மற்றும் ஒரே செயலை பலமுறை செய்ய தூண்டும் ஓ.சி.டி (Obsessive-Compulsive Disorder) எனப்படும் மனநோய் உள்ளவர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

செய்திகள் மற்றும் கொரோனா குறித்த தகவல்களிலிருந்து விலகியிருங்கள்.

கொரோனா வைரஸ் குறித்து தினமும் கேட்கும் செய்திகள் நமக்கு கவலை அளிப்பதை புரிந்து கொள்ள முடிகிறது.



இணைய செய்திகள் மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து விலகி இருப்பது நல்லது.

நிறைய தவறான தகவல்கள் மற்றும் வதந்திகள் பரவி வருகின்றன. எனவே சரியான செய்திகளை ஒளிப்பரப்பும் ஊடகம் அல்லது அரசாங்கம் வெளியிடும் தகவல்களை மட்டும் நம்புங்கள்.

கை கழுவுங்கள் - பதற்றம் வேண்டாம்..

எங்கும் செல்லாமல், எதையும் தொடாமல், எந்த வேலையும் செய்யாமல் சிலருக்கு பயத்தின் காரணமாக அடிக்கடி கைகளைக் கழுவிக் கொண்டே இருக்கவேண்டும் என்ற உணர்வு ஏற்படும். அடிக்கடி கைகழுவவேண்டும் என்ற எண்ணம் பயத்தின் காரணமாக தோன்றுபவர்கள் தங்களை சரிசெய்து கொள்ளவேண்டும்.

நண்பர்கள் மற்றும் உறவுகளுடன் பேசுங்கள்..

வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்கும் சூழலில் உள்ளவர்கள், உங்கள் மீது அக்கறைகொள்ளும் நண்பர்கள் மற்றும் உறவினர்களைத் தொடர்பு கொண்டு உரையாடுங்கள்.

புதியன கற்றுக் கொள்ளலாம்..

ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வேலைகளில் ஈடுபடுங்கள். உங்களுக்கு விருப்பமான புத்தகங்களைப் படிக்கலாம், பாட்டு, நடனம், இசை, மொழி என புதிதாக ஏதேனும் ஒன்றை இணையத்தைப் பயன்படுத்திக் கற்றுக் கொள்ள முயற்சிக்கலாம். இதனால் இறுதியில் உங்கள் தனிமையான நாட்களை நீங்கள் சரியாகப் பயன்படுத்தினீர்கள் என்ற நிறைவு ஏற்படும்.



உங்கள் மனம் இயற்கையை அணுகட்டும்

இயற்கையையும் சூரிய ஒளியையும் முடிந்த வரை உங்கள் மனம் அணுகட்டும். நல்ல உணவு உண்ணுங்கள், நிறையத் தண்ணீர் குடிங்கள், யோகா, தியானம், உடற்பயிற்சி செய்யுங்கள்.

உங்கள் எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் எதிர்வினையாற்றத் தேவையில்லை. அமைதி காக்கவும். நீங்கள் நினைக்கும் அனைத்தும் சரி தான் என்று நம்பாதீர்கள். அது வெறும் உணர்வோ, யோசனையோ மட்டும் தான்.

இந்தத் தருணத்தைப் பற்றி மட்டும் சிந்தியுங்கள். ஏனென்றால் இந்தத் தருணம் நன்றாகத்தான் உள்ளது. முற்றிலும் புதிய அனுபவமாக அதை உணருங்கள். அதிலிருந்து புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள மனதைத் தயார்படுத்திக்கொள்ளுங்கள்.

• சத்துள்ள உணவு அவசியம்

உடலை பாதிக்கக்கூடிய கிருமிகளிலிருந்து காத்துக் கொள்ள நம் உடம்பின் நோய் எதிர்ப்பு சக்தி வலிமையாக இருக்க வேண்டும். சாதாரணமாக நம் உடலின் நோயெதிர்ப்பு சக்தியை இரண்டு வகைகளில் பெறுகிறோம். ஒன்று மரபுவழியாக அமைந்த சக்தி, மற்றொன்று உணவுப்பழக்கம்.

ஆரோக்கியமான உணவு மற்றும் பழக்க வழக்கங்களை பின்பற்றினாலே நோய்களிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள முடியும்.

நம் தமிழ்நாட்டு சமையலில் மிளகு, இஞ்சி, பூண்டு, மஞ்சள் இல்லாத உணவே இல்லை என்று சொல்லலாம். இவை நோயெதிப்பு சக்தியை அதிகரிப்பதில் முக்கியமானவை.

இஞ்சி, பூண்டு, மிளகு, துளசி, ஏலக்காய் போன்றவற்றை தட்டிப்போட்டு அத்துடன் பனை வெல்லம் சேர்த்து சாப்பிட்டால் சளி, தொண்டை வலிக்கு இதமாக இருக்கும்.

சுத்தமாகக் கைகளைக் கழுவும் முறை



கிரீன் டீ அல்லது பிளாக் டீ குடிக்கும்போது எலுமிச்சையை 8 துண்டுகளாக வெட்டி ஒரு டம்ளர் டீக்கு ஒரு துண்டு என்ற வீதத்தில் பிழிந்து குடிக்கலாம். தோல் நீக்கிய இஞ்சித்துண்டை பிளாக் டீயில் நசுக்கிப் போட்டுக் குடிக்கலாம்.

சிட்ரஸ் பழங்களான ஆரஞ்சு, எலுமிச்சை, சாத்துக்குடி, திராட்சை போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை தினமும் சாப்பிடுவது அவசியம். மலை நெல்லிக்காய் மிகச் சிறந்தது. இவற்றில் உள்ள வைட்டமின் C இரத்தச் செல்களில் உள்ள வெள்ளை அணுக்களை அதிகரிக்கும்.

மாம்பழம், கொய்யா, அன்னாசிப்பழம், எலுமிச்சைப்பழம், பப்பாளி, ஸ்ட்ராபெர்ரி, கிவி பழம் போன்றவற்றில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக உள்ளது. ஏதேனும் ஒன்றை தினமும் உட்கொள்ளலாம்.

சர்க்கரைவள்ளிக் கிழங்கை வேகவைத்து, வெல்லம், ஏலக்காய் சேர்த்து குழந்தைகளுக்கு கொடுக்கலாம்.

சமைக்கும் உணவுகளில் முருங்கை காய், கீரை வகைகள், எலுமிச்சை, கேரட், குடைமிளகாய், தேங்காய் சேர்த்து கொள்வது அவசியம். முருங்கைக்கீரை, பசலைக் கீரை ஆகியவற்றை பருப்புடன் சேர்த்து சாம்பார் அல்லது பொறியல் அல்லது சூப் வைத்து சாப்பிடலாம்.



நோயெதிர்ப்பு மண்டல ஹோமியோஸ் டாஸிஸை பராமரிக்க பூண்டு துணைபுரியும். தக்காளி, மிளகு, பூண்டு ரசம் வைத்து சூடாக அடிக்கடி குடிக்கலாம். சட்னி, சாம்பார் எதாவது ஒன்றில் பூண்டை கட்டாயம் சேர்த்துக் கொள்வது நல்லது.



தயிரில் உள்ள வைட்டமின் D நேயெதிர்ப்பு சக்திக்கு உதவும். அதேபோல பாதாமில் உள்ள வைட்டமின் E சத்தும் முக்கியமானது. தினமும் 5 பாதாம் பருப்புகள் சாப்பிடலாம்.



நோய்களை தாக்கி அழிப்பதில் வல்லதாகச் செயல்படும் மஞ்சள் உணவில் கட்டாயம் சேர்த்துக்கொள்வது அவசியம். இதிலிருக்கும் குர்குமின், ஆக்ஸிஜனேற்ற பண்புகள் நாள்பட்ட அழற்சி நோய்களை நிர்வகிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சாம்பார், பொரியல், குழம்பு, கூட்டு என எந்த சமையலாக இருந்தாலும் மஞ்சள் சேர்த்து செய்யுங்கள்.

மீன், நண்டு, இறால் போன்ற கடல் சார் உணவுகளிலும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக உள்ளது.

அன்னாசிப்பூ, பாதாம், பிஸ்தா, அத்தி, பேரீட்சை, கறுப்பு திராட்சை, ஆளிவிதை, சூரியகாந்தி விதை, பூசணி விதைகள், ப்ரோக்கோலி போன்றவற்றையும் சாப்பிடலாம்.

கூடியவரை வீட்டில் தயாரித்த உணவையே சாப்பிடுவதும், ஹோட்டல், வண்டிக்கடை, ரோட்டோரக் கடைகளில் சாப்பிடுவதை தவிர்ப்பதும் கொரோனா வைரஸிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள உதவும்.


அருள்மிகு வீரமாத்தி அங்காள பரமேஸ்வரி துணை!
வேல்முருகன்
VMMF
மெட்டல் மார்ட் &
பர்னிச்சர் ஷோரூம்
24 ஆண்டுகால... வடக்குவாசல் பாத்திரக் கடை
Prestige
Prestige
Preethi
ULTRA
9976765838
10-1, வெங்கட கிருஷ்ணா ரோடு,
லதாங்கி தியேட்டர் பின்புறம்
பசுபதி ரோடு கார்னர்
உடுமலைப்பேட்டை - 642 126

24 மனை செய்தித் துளிகள்



பள்ளிபாளையம் சமூக மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் விநியோகம்

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சமூகத்தின் அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த நண்பர்கள் குழுவின் சார்பில் கொரோனா ஊரடங்கு தடை உத்தரவு அமலில் உள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையில் வறுமையில் உள்ள நமது சமூக மக்கள் மற்றும் மாற்று சமுதாய மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி கடந்த 11.4.2020 சனிக்கிழமை அன்று காலை 11 மணிக்கு சமூகத்தின் முன்னால் பெரிய தனம் செந்தில்குமார் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது.

நமது சமூகம் மற்றும் மாற்று சமூகத்தை சேர்ந்த மிகவும் வறுமையில் உள்ள 300 குடும்பங்களை தேர்வு செய்து அவர்களுக்கு தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய், ரவை,கோதுமை, மஞ்சள் தூள், சாம்பார் தூள், டீ தூள், காப்பி தூள், போன்ற பொருட்களை மொத்தமாக ஒரு பையில் போட்டு தயார் செய்து வழங்கப்பட்டது. இதன் மதிப்பு 500 ரூபாய் ஆகும் மொத்த மதிப்பு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆகும்.



இந்நிகழ்ச்சியில் சமூகத்தின் பிரபல தொழிலதிபர் வி.டி.கருணாநிதி (கருணா டெக்ஸ்), தணிகாச்சலம் (குபேர் ஏஜென்சி), தங்கராஜ் (விஜய் டெக்ஸ்), மெடிக்கல் வெங்கட்ராமன், கலைப்புலி செல்வராஜ், நடேசன் (முருகேசன் மளிகை), செட்டுமை மாரிமுத்து, சுப்பராயன் (ஊராளி), முருகேசன் (ஊராளி), ஓடி ரத்தினம், சிப்பீஸ் ரமேஷ், செந்தில்குமார், அருணகிரி, கோபால கிருஷ்ணன் (லைசென்ஸ்), கௌரிசங்கர் (மகேஷ்வரி டெக்ஸ்), மாதவன், சீனிவாசன், சம்பத், ராஜேந்திரன், கந்தவேல், குமார், லைட் ராஜ், காட்டூர் சுரேஷ், செந்தில்குமார், ஆறுமுகம் (டைரி), மணிகண்டன் ஆகியோர் பங்கேற்றனர்.

சிறப்பு அழைப்பாளராக மாற்று சமுதாயத்தை சேர்ந்த சகுபர் அலி (தமிழ்நாடு ஸ்டீல்ஸ்), செல்வம் (ஜெய்ஹிந்த் கார்மெண்ட்ஸ்), செல்வராஜ் (செல்வ பட்டாசு கடை), வடிவேல், பரமசிவம், ஜீவா (அரிசி கடை), துரை (சீதா மளிகை), கோயில்ராஜ் (மளிகை) ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கு நன்கொடை அளித்துக் கலந்து கொண்டு பொருட்களை வழங்கி சிறப்பித்தனர்.

விழா முடிந்ததும் சமூக இடைவெளி கருதி நேரடியாக வீட்டுக்கே சென்று பொருட்களை வழங்கினர் பொருட்களை பெற்றுக் கொண்ட நமது சமூக மக்களும் பொதுமக்களும் மிக்க மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துக் கொண்டனர்.

- அ.சுரேஷ், குலமுரசு நிருபர்.
பள்ளிபாளையம்.


P.M.P. கலை & அறிவியல் கல்லூரி
(இருபாலர் பயிலகம் - பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
தோக்கம்பட்டி, தருமபுரி-5.
Ph : 04342 - 292681, 231682 Cell : 94432 59019
அன்பு அறிவு அறம்
குறைந்த கட்டணம்
நிறைந்த கல்வி
இலவச பேருந்து வசதி
U.G COURSES
B.Sc., Computer Science / Mathematics, Maths., (C.A) / Physics / Chemistry,
B.C.A., B.Com.,(C.A), B.B.A.,
B.Com., B.A., Tamil / English
P.G COURSES
M.Sc., Mathematics, Physics / Chemistry, M.Com.,
கல்லூரியின் சிறப்பம்சங்கள் :
கடந்த 15 ஆண்டுகளாக கல்விப் பணியில் திறமையான மாணவர்களை உருவாக்கி மக்கள் மத்தியில் பெயர் பெற்ற அனுபவம் வாய்ந்த முதல் கலை அறிவியல் கல்லூரி.
மாணவ, மாணவிகளின் ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பில் தனிக்கவனம்.
உயர்தரம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் A/C வசதியுடன் கூடிய இயற்பியல், வேதியியல் மற்றும் கணினி ஆய்வகங்கள்
கல்லூரி பருவ கட்டணத்தை நான்கு தவணையாக செலுத்தும் வசதி.
அனுபவம் வாய்ந்த முதல்வரின் சீரிய வழிகாட்டுதலில் தகுதியும் அனுபவம் வாய்ந்த பேராசிரியர்கள்.
ஆண்டுதோறும் 80% மாணவர்கள் தேர்ச்சி பெற்று பட்டம் பெறுகின்றனர்
மத்திய, மாநில அரசுகள் வழங்கும் அனைத்து கல்வி உதவித்தொகையும் பெற்றுத் தரப்படுகிறது.
IAS / IPS / TNPSC போட்டி தேர்வுகளுக்கு தனி பயிற்சி வகுப்புகள் மற்றும் மாதிரி தேர்வுகள்.
SPOKEN ENGLISH, Personality Development மற்றும் Communication Skills போன்றவற்றிற்கு சிறப்பு வகுப்புகள்.
மாணவர்களுக்கு பி.எம்.பி குழுமம் நிறுவனங்களில் உடனடி வேலை வாய்ப்பு தரப்படுகிறது
அனைத்து வழித்தடங்களிலும் பாதுகாப்பான இலவச பேருந்து வசதி உண்டு

நளபாகம்

- ஆப்பிள் நறுக்கி வைக்கும்போது சிறிதளவு உப்பை அவற்றில் தடவி வைத்தால் ஆப்பிள் கருத்து போகாமல் இருக்கும்.
- நாம் வாங்கும் சில ஆடைகளில் அதிகமாக சாயம் போகும், அந்த சமயத்தில் அலசும் தண்ணீரில் சிறிதளவு உப்பு சேர்த்து சிறிது நேரம் ஊறவைத்த பிறகு அலசினால். ஆடையில் அதிகளவாக சாயங்கள் போவதை தவிர்த்துக்கொள்ள முடியும்.
- பித்தளை மற்றும் செம்பு பாத்திரங்கள் விளக்கும் போது எலுமிச்சை சாற்றில் உப்பு சேர்த்து நல்ல பேஸ்ட்டு போல் கலந்து வைத்துக்கொண்டு, இந்த கலவையை கொண்டு பித்தளை பாத்திரத்தை விளக்கினால் தங்கம் போல் ஜொலிக்கும்.
- நாம் சமைக்கும் போது சூடான திரவங்கள் நாம் மீது தெளித்துவிட்டது என்றால், அப்போது உடனே உப்பை அந்த இடத்தில் வைத்துவிட்டீர்கள் என்றால் எரிச்சல் உடனே சரியாகிவிடும்.
- சாதாரணமா நாம் காலிஃபிளவரில் இருக்கும் புழுவை எடுப்பதற்கு வெந்நீரில் வேகவைப்போம், அப்போது சிறிதளவு உப்பும் சேர்த்து வேகவைத்தால், அவற்றில் இருக்கும் புழு மற்றும் கிருமிகள் அனைத்தும் வெளியேறிவிடும். காலிஃபிளவரும் வெள்ளையாகவே இருக்கும்.
- கோதுமை மாவில் சில சமயங்களில் வண்டுகள் இருக்கும், இந்த வண்டுகள் வராமல் தவிர்த்துக்கொள்ள கோதுமை மாவில், தூள் உப்பு இரண்டு ஸ்பூன் சேர்த்து நன்றாக கிளறி வைத்தால், கோதுமை மாவில் வண்டுகள் வருவதை தவிர்த்துக் கொள்ள முடியும். கோதுமை மாவின் அளவுக்கு ஏற்ப உப்பு சேர்த்து கலந்து வைத்துக் கொள்ளுங்கள்.
- டைனிங் டேபிள் அழுக்காக இருந்தால் அப்போது எலுமிச்சை சாற்றில் உப்பு சேர்த்து நன்றாக கலந்து, அந்த கலவையை கொண்டு, டைனிங் டேபிளை சுத்தம் செய்தால், அவற்றில் இருக்கும் கறைகள் அனைத்தும் நீங்கிவிடும்.
- மிக்சி ஜாரில் உள்ள பிளைடு ஷார்ப்பாக இல்லையென்றால். அப்போது ஒரு கப் கல் உப்பை மிக்சி ஜாரில் போட்டு அரைத்தால் போதும். பிளைடு நல்ல ஷார்ப்பாக இருக்கும்.
- உப்பை எப்போதும் பிளாஸ்ட்டிக் டப்பாவில் தான் கொட்டி வைக்க வேண்டும்.
- பச்சை மிளகாயை காம்புடன் வைக்காமல் காம்பை எடுத்து விட்டு நிழலான இடத்தில் வைத்தால் நீண்ட நாட்கள் இருக்கும்.
- எண்ணெய் கறையை நீக்க, எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி, அதை உப்பில் வைத்து, அந்த துண்டுகளை வைத்து தேய்க்கலாம்.
- முட்டை விழுந்து உடைந்து விட்டால், அதன் மீது சிறிதளவு உப்பைத் தூவி, பிறகு துடைத்து எடுத்தால், சுத்தம் செய்வதும் எளிது; வாடையும் இருக்காது
- காய்கறிகளை அரிந்து பிரிட்ஜ்யில் வைத்தால், காய்கறிகளில் உள்ள சத்து குறைந்து விடும்.
- தேங்காயை துருவி அதை கொதிநீரில் போட்டு வைத்து விட்டு பிறகு கைபொறுக்கும் சூட்டில் எடுத்து பிழிந்தால் கெட்டியான பால் கிடைக்கும்.




உ
ஸ்ரீ காமாட்சி அம்மன் துணை
24 மனை தெலுங்கு செட்டியார்கள்
தெலுங்குபட்டி செட்டி, சாது செட்டி
சமுதாய பெருமக்கள் அனைவரும்,
எல்லா வளமும், நலமும் பெற்று
நிறை செல்வங்களுடன்,
நீண்ட ஆயுளுடனும் வாழ்வாங்கு வாழ
உலகளந்த மகாவிஷ்ணு,
அன்னை காமாட்சி தாயை
வேண்டி வணங்குகிறேன்.
என்றும் உங்கள் பாசத்துடன்:
தலைமை
சங்கத் தலைவர்
ரெ. நடராஜன்
24 மனை தெலுங்கு செட்டியார்கள் தலைமைச் சங்கம்
155, ஈ.வே.ரா.பெரியார் நெடுஞ்சாலை,
கீழ்பாக்கம், சென்னை - 600 010.



மணக்கோலம்

புதிய சந்தா, புதுப்பித்தல், முகவரி மாற்றம் மற்றும் மணக்கோலம் பகுதியில் சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய தொடர்பு கொள்ளவேண்டிய செல்பேசி எண்: **99 65 900 990**

மணக்கோலம் வாசகர்கள் கவனத்திற்கு

- மணக்கோலம் பகுதி வெளிப்படையானது. நம் இனமக்கள் வரன் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள உதவும் இலவச சேவைப் பகுதி. இது விளம்பரம் அல்ல. இதற்கு தனியாகக் கட்டணம் கிடையாது.
- மணக்கோலம் பகுதியில் வரன் விபரம் வெளியிட 24 மனை குலமுரசு இதழுக்கு ஆண்டு சந்தாதாரராக இருக்கவேண்டும் என்பது மட்டுமே விதிமுறை.
- இப்பகுதியில் வரன் பற்றிய தகவல்கள் மூன்று மாத இதழ்களில் தொடர்ந்து வெளியிடப்படும். மூன்று மாதங்களில் வரன் அமையாதவர்கள் மீண்டும் மூன்று மாதங்கள் மறுபிரசுரம் செய்து கொள்ளலாம். இம்முறையில் ஆண்டு சந்தா நிறைவடையும் காலம் வரை ஒருவர் நான்கு முறை மறுபிரசுரம் செய்து கொள்ளலாம்.
- மணக்கோலம் பகுதியில் மறுபிரசும் செய்ய, விபரம் சேர்க்க, சந்தா விபரம் அறிய 99 65 900 990 என்ற செல்பேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும் அல்லது manakolam24@gmail.com என்ற மின்னஞ்சலில் தெரிவிக்கவும்.
- வரன்களுக்குத் திருமணம் உறுதிசெய்யப்பட்டால் சேவை மைய எண்ணில் தொடர்பு கொண்டு வரன் தகவலை நீக்கிக் கொள்ளலாம்.
- மணக்கோலம் மூலமாக வரன் அமைந்தவர்கள் திருமணப் படத்தை குலமுரசில் வெளியிட விபரங்களுடன் அனுப்பிவைத்தால், வெளியிடப்படும்
- ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்கு முன்பு வரும் வரன் தகவல்கள் மட்டுமே அம்மாத இதழில் இடம்பெறும். அதற்குப்பின் வருபவை அதற்கடுத்த இதழில் இடம்பெறும்.
- இப்பகுதியில் வெளியாகும் வரன் விபரங்களுக்கு வெளியிடும் குடும்பத்தாரே முழுப் பொறுப்பு. மணமகன் அல்லது மணமகள் குறித்த விபரங்களை சம்பந்தப்பட்ட குடும்பத்தாரே தொடர்பு கொண்டு விசாரித்து தங்களுடைய சொந்தப் பொறுப்பில் திருமணங்களை உறுதி செய்துகொள்ளவும்.
- வணிக நோக்கமுடையவர்கள் – இடைத்தரகர்கள் எந்த நிலையிலும் மணக்கோலம் பகுதியைப் பயன்படுத்தி பணம் வசூலிப்பதோ – நகல் எடுத்து விற்பனை செய்வதோ – வேறு வழிகளில் பயன்படுத்துவதோ கூடாது.
- 24 மனை குலமுரசு இதழுக்கு தபால், மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப் மூலமாக வரும் வரன் விபரங்களை நாங்கள் எவருடனும் பகிர்ந்து கொள்வதில்லை. வேறு தளங்களிலும் நாங்கள் வெளியிடுவதில்லை.

மணக்கோலம்
பக்கங்களில் இடம்பெறும்
தனிநபர் விபரங்கள்
பொதுவெளியில் பகிர்வதைத்
தவிர்க்க இந்த இதழில் மணக்கோலம்
பகுதி சேர்க்கப்படவில்லை.
மணக்கோலம் பகுதியுடன்
இணைந்த முழு குலமுரசு இதழ்
சந்தாதாரர்களின் கைபேசி
எண்ணிற்கு தனியே
அனுப்பப்பட்டுள்ளது.

மணக்கோலம்

கட்டணமில்லாத இலவச சேவை

1. 24 மனை குலமுரசின் மணக்கோலம் பகுதி வெளிப்படையானது. வரன் வேண்டுவோர் பயன்பாட்டிற்கான இலவசச் சேவை இது. வணிக நோக்குடையவர்கள் - இடைத்தரகர்கள் எந்த நிலையிலும் மணக்கோலம் பகுதியைப் பயன்படுத்தக் கூடாது.
2. மணக்கோலம் பகுதிக்கு விண்ணப்பிப்பவர்கள் குலமுரசு சந்தா தாரர்களாக வேண்டும்.
3. வரன் தகவல்கள் 3 மாத இதழ்களில் மட்டுமே வெளியிடப்படும். ஏராளமானவர்கள் விண்ணப்பம் செய்வதால் தொடர்ந்து வெளியிட இயலவில்லை. 3 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் விண்ணப்பம் தந்தால் மறுபடியும் 3 மாதங்களுக்கு வெளியிடப்படும்.
4. வரன்களுக்கு திருமணம் நிச்சயமாகிவிட்டால் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.
5. மணக்கோல விண்ணப்ப மாதிரிப் படிவம்

   1. பெயர் ....
   2. படிப்பு ....
   3. பணி .... 4.வருமானம் ....
   5. வீடு 8 / 16 6. குலம் ....
   7. பிறந்தநாள் ....
   8. ராசி. .... 9.நட்சத்திரம்.........
   10. பெற்றோர் பெயர் ....
   11. ஊர் ....
   12. தொலைபேசி எண்: ....

மேற்கண்ட அனைத்துத் தகவல்களுடன் குலமுரசுக்கு சந்தா செலுத்தியதற்கான DD அல்லது செலானையும் ஸ்கேன் செய்து

manakolam24@gmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

24 மனை குலமுரசு

ஆண்டு சந்தா ரூ. 200/- மட்டுமே

சந்தா செலுத்துவது எப்படி?

Account Name	: 24 MANAI KULAMURASU
Bank Name	: CANARA BANK
Branch	: CHENNAI KILPAK
Account Number	: SB. A/c. 1650101014869
IFSC CODE	: CNRB0001650

மேற்கண்ட வங்கிக் கணக்கில் ஆன்லைன் மூலம் ரூ.200/- செலுத்தி அதன் பரிவர்த்தனை விபர ஸ்கிரீன்ஷாட்-ஐ **9965 900 990** என்ற வாட்ஸ்அப் (அ) kulamurasuoffice@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் முகவரி மற்றும் செல்போன் எண் குறிப்பிட்டு அனுப்பவும்.

கனரா வங்கியில் செலான் மூலம் பணமாக செலுத்துவோர் சந்தா ரூ.200 + வங்கி சேவைக் கட்டணம்+ GSTவரி ரூ.60 சேர்த்து ரூ.260/-ஐ கனரா வங்கிக் கணக்கில் செலுத்தி, கௌண்டர் ஃபைல் ரசீது நகலுடன் உங்கள் முகவரி எழுதி மின்னஞ்சல் (அ) வாட்ஸ்அப் (அ) தபாலில் அனுப்பவும்.

24 மனை குலமுரசு,
330/1, சின்னாண்டான் கோவில் வீதி,
கரூர் - 639001.
Customer Care Cell: 9965 900 990

- பிரதி மாதம் 1-ஆம் தேதி வரை வரும் கடிதங்களுக்கு அந்த மாதத்திலிருந்து குலமுரசு அனுப்பிவைக்கப்படும்.
- பிரதி மாதம் 2-ஆம் தேதிக்கு மேல் வரும் கடிதங்களுக்கு அடுத்த மாதத்திலிருந்து குலமுரசு அனுப்பி வைக்கப்படும்.
- குலமுரசு சந்தா பெறப்பட்டவுடன் உங்களுக் கென்று ஒரு ID எண் உங்கள் செல்போனுக்கு SMS மூலம் தெரிவிக்கப்படும்.

குலமுரசு வரவில்லையா?

உங்கள் ID எண் குறிப்பிட்டு **9965 900 990** என்ற தொலைபேசி எண்ணுக்கு தகவல் தெரிவிக்கவும். அல்லது kulamurasuoffice@gmail.com - என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.


செந்தில்குமார்
டெக்ஸ்டைல்ஸ் A/c.,
SINCE 1976
எல்லாமே இருக்கு...
நல்லாவே இருக்கு...
ஆடைகளின்
அரண்மனை
வியக்கதக்க புத்தம்
புதிய 2018-ன் பேஷன்
கலெக்ஷன்
ஆடைகளை அள்ளிச்
செல்லுங்கள்....
S.K. டவர்ஸ், சித்த வீரப்பசெட்டி தெரு,
தருமபுரி. ✆ 04342 - 267581
மைசூர் : 0821 - 2437582 / தும்கூர் : 99801 88855



தெய்வத்திரு. அருட்செல்வர். எம்.சண்முகம் செட்டியார்
திருமதி. குஞ்சம்மாள் சண்முகம்



வாசகர் குரல்

வாசகர்களின் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. வாசகர்கள் எழுதும் நிறை, குறை அனைத்தும் ஒளிவுமறைவின்றி வெளியிடப்படும்.

நான் நீண்டகாலமாக குலமுரசு பத்திரிக்கையை விரும்பிப் படித்துக் கொண்டு இருக்கும் வாசகன். தங்கள் குலமுரசு மார்ச் பதிப்பில் வெளியிட்ட பேட்டவாய்த்தலை வற்றாக்காளி வலசு தீர்த்தக்காவடிகள் பாதயாத்திரை குழுவின் 50ஆம் ஆண்டு பொன்விழா நிகழ்வுகளை மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும், படங்களுடன் வெளியிட்டமைக்கு எனது மனமார்ந்த நன்றி. நம் இனத்தில் இம்மாதிரியான நிகழ்வுகளை நம் இனமக்களிடம் கொண்டு சேர்ப்பதில் குலமுரசுக்கு ஈடு இணை ஏதுமில்லை.

- A.நாகராஜ், கோயம்புத்தூர்.

௸ ௸ ௸

ஐயா! நீங்கள் இலங்கை உலகத் திருக்குறள் மாநாட்டில் பங்கேற்ற செய்தியையும், கருத்தரங்க அமர்வுக்கு தலைமை ஏற்ற செய்தியையும் குலமுரசு வாயிலாக அறிந்து மிகுந்த மகிச்சியடைந்தேன். உலகத் தமிழறிஞர்களிடையே அமர்வதற்கு முழுக்க முழுக்கத் தகுதியுடையவர் நீங்கள். உளமார்ந்த பாராட்டுதல்கள். இலங்கை உலகத் திருக்குறள் மாநாட்டில் வெளிவந்துள்ள தங்களின் வாழ்த்துப்பா அருமையிலும் அருமை. அந்தக் கவிதையை பலமுறை படித்துச் சுவைத்தேன். வாழ்க தங்கள் தமிழ்ப்பணி.

- புலவர் கோமகன்,
தமிழாசிரியர் (ப.நி), வத்தலக்குண்டு.

௸ ௸ ௸

உலகளவில் நடந்த ஒரு தமிழ் மாநாட்டில் அதுவும் திருக்குறள் மாநாட்டில் நீங்கள் கலந்து கொண்ட செய்தியை குலமுரசின் மூலம் அறிந்து மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தேன். மனமாரப் பாராட்டுகிறேன். இந்தப் பாராட்டை நீங்கள் அவசியம் குலமுரசில் வெளியிடவேண்டும்.

- காந்தி, சேலம்.

௸ ௸ ௸

கடந்த மாதக் குலமுரசில் பங்குனி உத்திரம் பற்றிய அரிய தகவல்களைத் தொகுத்துத் தந்துள்ளீர்கள். பங்குனி உத்திரம் என்றால் முருகனுக்கு காவடி எடுத்து செலுத்தும் திருவிழா என்று மட்டும் இதுவரை நினைத்திருந்தோம். இவ்வளவு பெரிய பக்தி - ஆன்மிகப் பெருவிழா என்பதை குலமுரசின் மூலம் படித்துத் தெரிந்து கொண்டோம். மிகுந்த மகிழ்ச்சி.

- R.கருணாகரன், பொள்ளாச்சி.

௸ ௸ ௸

நமது குலமுரசுப் பத்திரிகை தொடர்ந்து வெளிவந்து 9ஆம் ஆண்டில் காலடி வைப்பது மிகமிக சந்தோஷமான செய்தி. அதை உணர்த்தும் வகையில் அட்டைப்படத்தை 9 எண் வடிவில் அமைந்திருப்பதும் அதற்குள் முன் வெளிவந்த குலமுரசின் அட்டைப் படங்களைப் போட்டிருப்பதும் ரசிக்கத்தக்கதாக இருந்தது. நல்ல கற்பனை வளத்தோடு அந்த அட்டைப் படத்தை அமைத்துள்ளீர்கள். தொடரட்டும் உங்கள் திருப்பணி!

- R.மனோகரன், மேலூர், மதுரை.

௸ ௸ ௸

குலமுரசுப் பத்திரிகை 9 ஆண்டுகளாக இடைவெளியில்லாமல் தொடர்ந்து அழகாக - சுவையாக வெளிவருவது பாராட்டிற்குரியது. ஆசிரியரின் உழைப்பை, அறிவை கைகூப்பி வணங்கி பாராட்டுகிறோம். அன்னை காமாட்சி அருளால் மேலும் மேலும் குலமுரசு வளர பிரார்த்திக்கின்றேன்.

- அங்கண்ணன், MABL.,
உயர்நீதிமன்ற வழக்கறிஞர்,
வண்ணாரப்பேட்டை.

௸ ௸ ௸

கவிஞர் ஜெயதேவனின் 'சாயம்போன பட்டாம்பூச்சி' கவிதை அழகிய சொல்லடுக்குகளைக் கொண்ட சுவைமிக்க கவிதை. ரசித்துப் படித்தேன். நம் இனத்தில் இவ்வளவு சிறந்த கவிஞர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிந்து பெருமைப்படுகிறேன். தொடர்ந்து நம் இனக் கவிஞர்களின் கவிதைகளை வெளியிட்டு நம்மவர்களை வெளிச்சப்படுத்துங்கள். நன்றி!

- இர.நடராசன் (கூத்தரசன்),
தலைமை ஆசிரியர் (பணி நிறைவு), சீர்காழி.

௸ ௸ ௸



KANTHASWAMY
RAISING SUN BRAND
PALAKKAD

KANTHASAMY METAL ROLLING MILLS

Manufacturers of : ALUMINIUM SHEETS, CIRCLES & VESSELS

5/432-A, Kuppiyode, Maruharoad, PALAKKAD - 678 007.
E-mail: kanthaswamypalakkad@gmail.com
Phone: 0491-2572886, Mobile: 98430 54999

RADHA METAL INDUSTRIES

Manufacturers & Dealers in ALUMINIUM VESSELS & CIRCLES

11/1434, Market Road, PALAKKAD - 14. Kerala.
E-mail: radhametalpalakkad@gmail.com
Phone: 2500610, 2502578, Mobile: 9447100891

K.ராஜமன்னார் - R.மகாலட்சுமி மற்றும் குடும்பத்தார்,

83, சர் சண்முகம் ரோடு, கோயம்புத்தூர் - 641002.



அறிவில் ஐந்து பெரிது ஆறு சிறிது

சீ மிருகமே!
என்று மனிதனைத் திட்டாதே
மனிதனே

எந்த விலங்கும்
இரைப்பைக்கு மேலே
இன்னொரு வயிறு வளர்ப்பதில்லை

எங்கேனும்
தொப்பைக் கிளியோ
தொப்பை முயலோ
பார்த்ததுண்டா?

எந்த விலங்குக்கும் சர்க்கரை
வியாதியில்லை தெரியுமோ?

இன்னொன்று;
பறவைக்கு வேர்ப்பதில்லை

எந்தப் பறவையும்
கூடுகட்டி
வாடகைக்கு விடுவதில்லை

எந்த விலங்கும்
தேவையற்ற நிலம்
திருடுவதில்லை

கவனி மனிதனே
கூட்டு வாழ்க்கை இன்னும்
குலையாதிருப்பது
காட்டுக்குள்தான்

அறிந்தால் ஆச்சரியம் கொள்வாய்
உடம்பை உடம்புக்குள் புதைக்கும்
தொழுநோய்
விலங்குகளுக்கில்லை

மனிதா
இதை மனங்கொள்

கர்ப்பவாசனை
கண்டு கொண்டால்
காளைப் பசுவைச் சேர்வதில்லை

ஒருவனுக்கொருத்தி
உனக்கு வார்த்தை
புறாவுக்கு வாழ்க்கை

எந்தப் புறாவும்
தன் ஜோடியன்றி
பிறஜோடி தொடுவதில்லை

பூகம்பம் வருகுதெனில்
அலைபாயும் விலங்குகள்
அடிவயிற்றில் சிறகடிக்கும்
பறவைகள்

இப்போது சொல்
அறிவில்
ஆறு பெரிதா?
ஐந்து பெரிதா?

மரணம் நிஜம்
மரணம் வாழ்வின் பரிசு

மாண்டால்

மானின் தோல் ஆசனம்
மயிலின் தோகை விசிறி
யானையின் பல் அலங்காரம்
ஒட்டகத்தின் எலும்பு ஆபரணம்

நீ மாண்டால்
சிலரை
நெருப்பே நிராகரிக்கும்
என்பதால்தானே
புதைக்கவே பழகினோம்

ஒன்று கேட்கிறேன்
எல்லா விலங்கும் மனிதனுக்குப் பாலூட்டும்
எவளேனும் ஒருதாய்
விலங்குக்குப் பாலூட்டியதுண்டோ?

"சீ மிருகமே!"
என்று
மனிதனைத் திட்டாதே

மனிதனே
கொஞ்சம் பொறு
காட்டுக்குள் என்ன சத்தம்

ஏதோ ஒரு மிருகம்
இன்னொரு மிருகத்தை ஏசுகிறது
"சீ மனிதனே"



கவிப்பேரரசு வைரமுத்து

நேரத்தை நேசியுங்கள்



திரு.என்.டி.ராமாராவ் அவர்கள் சினிமாவில் கொடிகட்டிப் பறந்த காலம். அவரைத் கதாநாயகனாக வைத்து திரைப்படம் தயாரிக்க விரும்பிய ஏவி.எம். நிறுவனத்தின் சார்பில் திரு.ஏ.வி.எம்.சரவணன் தொலைபேசி மூலம், சந்திப்பதற்கான நேரம் கேட்கிறார்.

எதிர்த் திசையில் தொலைபேசியைத் தாமே எடுத்த N.T.R. "நாளை நாலரை மணிக்குச் சந்திக்கலாம்" என்கிறார். பொதுவாக மாலை நாலரை மணியாகத்தான் இருக்கமுடியும் என்ற எதிர்பார்ப்பில் "சாயங்காலம்... நாலரை... சரி... எங்கே வரட்டும்" என்கிறார் சரவணன்.

"ம்ஹீம்.. காலை... அதிகாலை நாலரை மணி.... வீட்டிற்கு வந்து விடுங்கள்" என்றாராம் N.T.R. அதிர்ந்து போய் விட்டார் சரவணன். சந்திப்பதற்கு நேரம் கேட்டால் அதிகாலை நாலரை மணியை ஒதுக்கும் அதிசயம்.

அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. நன்றாக மேக்அப் (ஒப்பனை) போட்டு திரைப்படம் ஒளிப்பதிவு செல்ல தயாராக உட்கார்ந்திருந்தார் N.T.R. காலை நாலரை மணிக்கே, தொழிலில் அக்கறையோடு தயாராக இருந்த காரணத்தால் தான் N.T.R. நடிகர் என்ற நிலைகடந்து தலைவர் என்ற நிலைக்கும் தயாராக இருந்தார் அவர்.



பிறர் செலவில் காபி குடிக்கிற, டிபன் சாப்பிடுகிற பிச்சைக்கார மனோபாவம் மாதிரி பிறர் நேரத்தைத் திருடுகிற பிச்சைக்காரர் சிலரை நான் பார்த்திருக்கிறேன்.

"காலை 8.00 மணிக்குப் புறப்படுவோம். நான் வீட்டில் வந்து

சொல்வேந்தர் சுகிசிவம்

உங்களை அழைத்துக் கொண்டு செல்கிறேன். தயாராக இருங்கள்.... 9.00 மணிக்கு நாம் விமான நிலையத்தில் இருக்க வேண்டும்” என்று படித்துப் படித்துச் சொல்லி இருப்பேன். அப்போதும் சிலர் நாம் அவர்கள் வீட்டிற்குப் போனபிறகுதான் தயார் ஆவார்கள். “இதோ...இதோ....வந்துவிட்டேன்” என்று சொல்லியபடி இங்கும் அங்கும் ஓடியபடி சீப்பைத் தேடி... கண்ணாடியைத் தேடி ஷேவ் செய்துகொண்டு, காலம் கடத்துவார்கள். நம் கழுத்தை அறுப்பார்கள். கடிகாரத்தை நேரத்தை மதிக்கவே மாட்டார்கள். இவர்கள் சமூக விரோதிகள். காலத்தைக் கொலை செய்யும் கொலையாளிகள்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனைப் பற்றி திரு.சிவகுமார் ஒருமுறை சொன்னார் “காலை எட்டு மணிக்கு ஷூட்டிங் என்று சொன்னால் 7.50க்கே சிவாஜி சார் தயாராக மேக்அப் போட்டு முடித்துவிட்டு ஸ்டுடியோவில் உட்கார்ந்திருப்பார். அவருக்கு முன்னால் தயாராகி அவரை அசத்தவேண்டும் என்று நான் நினைப்பேன்.. முடியாது... மனுஷன் எனக்கு முன்னாடி தயாராகி விடுவார். என்ன பொருள். வாழ்வில் முன்னுக்கு வந்தவர்களில் பலர் கடிகாரத்தை மதித்தவர்கள். நேரத்தைப் பெரிதாக நினைத்தவர்கள்.



இன்று பிள்ளைகளில் பலர் குளிக்காமலேயே பள்ளிக் கூடம் வந்து விடுகிறார்கள். அதுவும் தாமதமாக... பள்ளி தொடங்கி, முன் வாசல் கதவு பூட்டப்பட்ட பின் வந்து பரிதாபமாக வெளியில் நிற்கிறார்கள்.... காரணம்.... சோம்பல்....இரவு பார்த்த T.V. இரவு தாமதமாகத் தின்ற உணவு இவற்றை ஒழுங்குபடுத்தினால் ஒழிய உருப்பட முடியாது என்பதை இளம் பிள்ளைகள் உணரவேண்டும். கடிகாரம் டிக்... டிக் என்று நகர்வதில்லை. “Quick,,,Quick” என்று நம்மை விரட்டுகிறது என்பதை உணர வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தன் சொந்தச் செலவில் வாங்க வேண்டிய முதல் உபயோகப் பொருள் கடிகாரம் என்பதே என் கருத்து. காந்தி அடிகள் கடிகாரத்தைக் காதலித்தார். கடவுளைப் போல கருத்தில் நிறுத்தினார். கடிகாரத்தின் அருமை அதன் விலையில் இல்லை. குறித்த நேரத்தில் குறித்த வேலை நிறைவேற்றும் அக்கறையில் இருக்கிறது. காந்தி அடிகள் குறித்த நேரத்தில் ஒரு கூட்டத்தில் பங்கேற்பதற்காக வாகனம் கிடைக்காதபோது சைக்கிளை எடுத்துக்கொண்டு போய்ச்சேர்ந்தார் என்று படித்திருக்கலாம். அவர்கள் எல்லாரையும் கடிகார முள் தைக்கவில்லை. வதைக்கவில்லை. முன்னேற வைத்திருக்கிறது.

அத்தனை சத்துக்களும் நிறைந்த அத்திப்பழம்



அத்தி (*Ficus Glomerata, Roxb; Moraceae*) மர வகையைச் சேர்ந்தது. நாட்டு அத்தி (*Country Fig*), வெள்ளை அத்தி (*Gular Fig*), நல்ல அத்தி (*Ficus Glomerata Cluster Fig*) என பல வகை அத்தி மரங்கள் உண்டு.

அத்தி அளவான உயரமுடைய நடுத்தர மரமாகும். இம்மரம் சுமார் 10 மீட்டர் வரை உயரமாக வளர்கிறது. மரத்தின் பட்டை சாம்பல் மற்றும் சிவப்பு நிறத்தில் காணப்படுகிறது. அத்தி இலைகளில் மூன்று நரம்புகள் இருக்கும். காய்கள் சற்று நீளமான முட்டை வடிவில் தண்டிலும், கிளைகளிலும் அடிமரத்திலும் கொத்துக் கொத்தாகத் தோன்றும். பெரிய நெல்லிக்காய் அளவில் உருண்டையாக சிறிது பச்சை நிறத்துடன் இருக்கும். காய் பழுத்த பின்பு கொய்யாப் பழத்தைப் போல் வெளிறிய மஞ்சள் நிறமாக மாறிவிடும். பழங்கள் தானே கீழே உதிர்ந்து விழுந்து விடும். அத்திப் பழம் நல்ல மணத்துடன் இருந்தாலும், அறுத்துப் பார்த்தால் உள்ளே மெல்லிய பூச்சிகள், புழுக்கள் இருக்கும். பொதுவாக பதப்படுத்தாமல் உண்ண முடியாது.




அத்திப்பழத்தின் மருத்துவ குணங்கள்

அத்திப்பழம் உணவை விரைவில் ஜீரணிக்கச் செய்து, சுறுசுறுப்பைத் தந்து, கடும் பித்தத்தை வியர்வை மூலம் வெளியேற்றி, ஈரல், நுரையீரலிலுள்ள தடுப்புகளையும் நீக்குகிறது. அத்திப் பழத்தைத் தின்பதால் வெட்டையின் ஆணிவேர் அற்றுப்போகிறது. கால் விரல்களில் உண்டாகும் ஒருவித நோயையும் வராமல் தடுக்கிறது. அத்திப்பழம் தின்பதால் வாய்நாற்றம் நீங்குவதுடன் தலைமுடியும் நீளமாக வளர்கிறது.

தினசரி 2 பழங்களை சாப்பிட்டால் உடலில் இரத்த உற்பத்தி அதிகரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமனடையும்.

மலச்சிக்கலை நீக்க உணவிற்குப் பிறகு சிறிதளவு அத்தி விதைகளைச் சாப்பிடலாம்.

நாள்பட்ட மலச்சிக்கலை குணமாக்க 5 பழங்களை இரவில் சாப்பிட வேண்டும்.



போதைப் பழக்கம் மற்றும் இதர வியாதிகளால் ஏற்படும் கல்லீரல் வீக்கத்தைக் குணமாக்க அத்திப்பழங்களை காடியில் (வினிகர்) ஒருவாரம் வரை ஊற வைக்க வேண்டும். அதன்பின் தினசரி இரண்டு பழங்களை ஒருவேளை சாப்பிடலாம்.

விஞ்ஞான ஆராய்ச்சி

அத்திப்பழத்தை ஆராய்ச்சி செய்த அறிவியலாளர்கள் இதில் புரோட்டீன், சர்க்கரை சத்து, கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் இரும்புச்சத்து அதிக அளவில் இருப்பதாகவும், மற்ற பழங்களைவிட அத்திப்பழத்தில் இந்த சத்துக்கள் நாலு மடங்கு அதிகமாக இருப்பதாகவும் ஆய்வில் கூறியுள்ளனர். இதைத் தவிர வைட்டமின் ஏ, வைட்டமின் சி அதிக அளவிலும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீமை அத்திப்பழம்

பதப்படுத்தப்பட்ட அத்திப்பழங்கள் யுனானி, நாட்டு மருந்துக் கடைகளில் விற்கப்படுகின்றன. இதை சீமை அத்திப்பழம் என்று கூறுவார்கள். சீமை அத்திப்பழம் வெண்குஷ்டத்தை குணமாக்குகிறது. அரை கிராம் காட்டு அத்திப்பழத்தை தினசரி ஒரு வேளை சாப்பிட்டு வந்தால் வெண்புள்ளிகள், வெண் குஷ்டம், தோலின் நிறமாற்றம் ஆகியவை குணமாகும். அதைப் பொடியாக்கி பன்னீரில் கலந்து வெண் புள்ளிகள் மீது பூசலாம். இதை தயாரிக்க முடியாதவர்கள் யுனானி நாட்டு மருந்துக்கடைகளில் விற்கப்படும் சபூப் பாஸ் என்னும் மருந்தை வாங்கிப் பயன்படுத்தலாம்.

அத்திப்பழம் பற்றி குறுந்தொகைப் பாடலொன்று இவ்வாறு குறிப்பிடுகிறது.

"ஆற்றயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
எழு குளிறு மிதித்த ஒருபழம் போலக்
குழைய கொடியோர் நாவே -"

குறுந்தொகை 24



Published by Dr. Durei Angusamy on behalf of 24 Manai Telugu Chettiar Charitable Trust from 155/203, E.V.R. High Road, Kilpauk, Chennai - 10. and Printed by S.Radhakrishnan at Sri Jayalakshmi Art Printers, 333, Puthu Nagar West Avenue, M.K.B. Nagar, Vyasarpadi, Chennai - 39. **Editor: Dr. Durei Angusamy**

வருந்துகிறோம்



24 மனை தெலுங்கு செட்டியார்கள் தலைமைச் சங்க முன்னாள் பொதுச் செயலாளர், பழனியில் நடந்த 9வது மாநில மாநாட்டை முன்னின்று நடத்தியவர், சமுதாய முன்னோடி

கோரமண்டல் திரு. **பழனிசாமி**
அவர்கள் 23-04-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.



24 மனை தெலுங்கு செட்டியார்கள் தலைமைச் சங்க துணைத் தலைவரும், கிருஷ்ணகிரி நகர 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சங்கத் தலைவரும், ஓய்வு பெற்ற நில அளவை சங்க முன்னாள் துணைச் செயலாளருமான

திரு.**N.துரைராசன்** அவர்கள்
01-04-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.



தலைமைச் சங்கத் துணைத் தலைவர் கோவை செட்டிவீதி **பரமசிவம்** அவர்களின் மைத்துனர்

திரு. **M.குணசேகரன்** அவர்கள்
11-04-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.



24 மனை தெலுங்கு செட்டியார்கள் தலைமைச் சங்கத் துணைத் தலைவர்
திரு. **புலவர் நா. ஆறுமுகம்** அவர்கள் மகன்

திரு. **ஆ.அங்குராஜ்** அவர்கள்
12-04-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர்களது மறைவுக்கு குலமுரசு தனது ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது.



காவிலிபாளையம் ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி



"எங்களது
Guru,
Guide &
Godfather
வள்ளல் KCP
அவர்களின் சமுதாயப் பணி
இன்று போல் என்றும்
சிறந்தோங்க வணங்கி வாழ்த்தும்



துரை கிருஷ்ணராஜ்
ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோவில்
முன்னாள் அறங்காவலர், பொள்ளாச்சி

VMD SONS
Dealers & Exporters of Rice &
Food Products

227, Market Road, Pollachi - 642 001.
Phone: 04259 - 326444 / 226649 / 326777

if undelivered, Please return to:
**203/155, E.V.R. High Road,
Chennai - 600010.**

Date of Publication Every Month 9th, Due Date of Posting 15th - 21st of Every Month. Posted at Egmore RMS Patrika Channel.
24 MANAI KULAMURASU TAMIL MONTHLY POSTAL REGISTERED NO. TN/CCN/593/2019-2021
LICENCE OF THE POSTAL REGISTERED WPP No. TN/PMG(CCR)/WPP604/2019-2021
REGISTERED WITH REGISTRAR, NEWS PAPER OF INDIA TNTAM/2013/48200

